பாட்டாளி சிந்தனை

Volume 27 No. 9

சோசலிஸ்ட் யூனிட்டி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

May 2017

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5

பொருளடக்கம்


- நீட் தேர்வு குறித்து . . . பக்கம் 1
- மாபெரும் நவம்பர் புரட்சி பக்கம் 3
- மனிதத் தன்மையற்ற முத்தலாஹ் முறை பக்கம் 5




5 மே, 1818 – 14 மார்ச், 1883

## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் கார்ல் மார்க்ஸ் அவர்களின் 200வது பிறந்த ஆண்டை அனுஷ்டிப்போம்

5 மே, 1818 – 5 மே, 2018

“இதுகாறும் போற்றிப் பாராட்டப்பட்டு, பணிவுக்கும் பக்திக்கும் உரியதாய் கருதப்பட்ட ஒவ்வொரு பணித்துறையையும் முதலாளித்துவ வர்க்கம் மகிமை இழக்கச் செய்துள்ளது. மருத்துவரையும் வழக்கறிஞரையும் சமயகுருவையும் கவிஞரையும் விஞ்ஞானியையும் அது தனது கூலியுழைப்பாளர்கள் ஆக்கிவிட்டது.

குடும்பத்திடமிருந்து அதன் உணர்ச்சி நய முகத்திரையைக் கிழித்தெறிந்து, குடும்ப உறவை வெறும் காசு பண உறவாய் முதலாளித்துவ வர்க்கம் சிறுமையுறச் செய்துவிட்டது.”

**கார்ல் மார்க்ஸ்**

*(கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை)*

# நீட் – நுழைவுத் தேர்வல்ல, ஏழை நடுத்தர மாணவர்கள் நுழைவதைத் தடுக்கும் தேர்வு

இளநிலை / முதுநிலை மருத்துவக் கல்வி என்பது இதுவரை மத்திய மற்றும் மாநிலங்கள் சம்பந்தப்பட்ட விஷயமாக இருந்துவந்தது. மத்திய அரசாங்கம் இந்திய மருத்துவ கவுன்சில் சட்டம் (1956) மற்றும் டென்டிஸ்ட் சட்டம்– 1956 ஆகியவற்றில் 2016ம் ஆண்டு கொண்டுவந்த ஒரு திருத்தத்தின்மூலம் மருத்துவக்கல்வி (MBBS), பல் மருத்துவக் கல்வி (BDS) ஆகியவற்றின் மாணவர் சேர்க்கையை நேரடியாக மத்திய அரசாங்கத்தின் ஆளுகையின்கீழ் கொண்டுவர மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அதாவது எம்பிபிஎஸ் மற்றும் பிடிஎஸ் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகள் தேசிய தகுதிகாண் மற்றும் நுழைவுத் தேர்வின் (National Eligibility and Entrance Test - NEET) மூலம் மட்டுமே சேர்க்கும்முறை கொண்டுவரப்பட்டுள்ளது.

மருத்துவப் படிப்பில், எய்ம்ஸ் மற்றும் ஜிப்மர் நீங்கலாக மற்ற அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கு, நாடு முழுவதும் நீட் நுழைவுத் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டுமுதல் தமிழகம் நீங்கலாக, அந்தந்த மாநில அரசாங்கங்கள் துவங்கிய மருத்துவக் கல்லூரிகளில் 85% இடங்களுக்கு சம்பந்தப்பட்ட மாநிலங்களே +2 மதிப்பெண் அடிப்படையிலோ அல்லது நுழைவுத் தேர்வு மூலமோ சேர்க்கையை நடத்தி வந்தனர். மீதமுள்ள 15% இடங்கள் அகில இந்திய கோட்டாவாக ஒதுக்கப்பட்டு அந்த இடங்களுக்கு மட்டும் மத்திய நுழைவுத் தேர்வுகள் நடத்தப்பட்டன. ஆனால் முந்தைய காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசாங்கம் அனைத்து இடங்களுக்கும் தேசிய அளவில் நுழைவுத் தேர்வு என்று தெரிவித்த அறிவிக்கைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பு இதைப் புரட்டிப் போட்டுவிட்டது. அனைத்து இடங்களுக்கும் தேசியத் தகுதிகாண் மற்றும் நுழைவுத் தேர்வு மூலமாக (நீட்) மட்டுமே மருத்துவ மாணவ சேர்க்கையை நடத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

நீட் என்று அழைக்கப்படும் இத்தேர்வானது பள்ளிக்கல்விக்கான மத்திய நிறுவனம் (Central Board of School Education - CBSC) யால் நடத்தப் படுகிறது. இந்திய மருத்துவக் கவுன்சில் இத்தேர்வுக் கான பாடத்திட்டத்தை (Syllabus) தீர்மானிக்கிறது. நீட் தேர்வில் குறைந்தபட்சம் 50 சதத்திற்கும்மேல் மதிப்பெண் பெற்றவர்கள் மட்டுமே நாடுமுழுவதும் எந்த ஒரு மருத்துவக் கல்லூரியிலும் சேர்வதற்கு இனி தகுதிபெற்றவராகிறார்.

நீட் தேர்விற்கு எதிராக கடுமையான அதிருப்தியும் எதிர்ப்பும் இருக்கையில் மத்திய அரசாங்கம் தற்போது ஒரு அவசரச் சட்டத்தை கொண்டு வந்துள்ளது. அதன்படி, கடந்த ஆண்டு மட்டும் மாநில அளவிலான மருத்துவக் கல்லூரி இடங்களில்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## ஏப்ரல் 24: எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 70வது ஸ்தாபக தினம்




கொல்கத்தாவில் ஏப்ரல் 24 மக்கள் திரள் கூட்டத்தில் தோழர் பிரவாஸ் கோஷ், பொதுச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார்

# கல்வியில் தனியார்மயம், வியாபாரமயத்தை தடுக்காமல் நீட் வெளியிடும் தகுதிப் பட்டியல் ஒரு மோசடியே

1ம் பக்கத் தொடர்ச்சி

அந்தந்த மாநிலங்கள் நுழைவுத் தேர்வுமூலமோ அல்லது +2 மதிப்பெண் மூலமோ நிரப்பிக் கொள்ளலாம் என்றும் மத்திய இடங்களுக்கும் தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கும் நீட் அவசியம் என்றும் தெரிவித்தது. ஆனால் இந்த ஆண்டு நீட் தேர்வு நடத்தப்பட்டுவிட்டது. ஏராளமான மாணவ மாணவியர் +2 தேர்வில் 100% மதிப்பெண் பெற்றிருந்த போதிலும் நீட் நுழைவுத் தேர்வில் என்ன மதிப்பெண் கிடைக்குமோ என்று பீதியடைந்துள்ளனர். இதனால் மருத்துவப் படிப்பு கனவு தகர்ந்துவிடுமோ என்று பெற்றோர்களும் மாணவ மாணவியரும் அச்சத்தில் உள்ளனர். நீட் தேர்வுக்கு கல்வியாளர்கள், பெற்றோர்கள், மற்றும் மாணவர்கள் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் மத்திய அரசாங்கம் விடாப்பிடியாக அமல்படுத்தியுள்ளது.

## நீட் – கல்வி வியாபாரமயத்தைத் தீவிரமாக்கும்

கல்வியின் தரம் சீரழிந்துவிட்டதாகவும், குறைந்த மதிப்பெண் பெற்ற தகுதி குறைவானவர்களுக்குக் கூட தனியார் மருத்துவக்கல்லூரிகள் இடமளித்து கட்டணக்கொள்ளையில் ஈடுபடுவதாகவும், அதை இந்த நீட் தேர்வு போக்கிவிடும் என்று சிலர் வாதிடுகின்றனர். தனியார் மருத்துவக் கல்லூரிகள் மட்டுமல்ல, தனியார் நர்சரிப் பள்ளிகள் முதல் பொறியியல், மருந்தியல், நர்சிங், கலை அறிவியல் கல்லூரிகளில் கட்டணக்கொள்ளை நடைபெறுவதை சாமானியர்கள் கூட அறிவார்கள். இவையெல்லாம் வெளிப்படையாகவே நடைபெறுகின்றன. இவற்றிற்கு எதிராக இதுவரை மத்திய அரசாங்கமோ அல்லது மாநில அரசாங்கமோ ஏன் சரியான நடவடிக்கையை எடுக்கவில்லை? மாறாக அக்கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் கல்வி நிறுவனங்கள் எவ்வித ஒளிவு மறைவுமின்றி பகல் கொள்ளை அடிப்பது தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளதை எவரேனும் மறுக்கமுடியுமா? எனவே நீட் தேர்வு கொண்டுவந்துவிட்டால் மட்டுமே கட்டணக்கொள்ளையைத் தவிர்த்து விடலாம் என்பது மக்களை ஏமாற்றும் செயலே ஆகும். மாறாக தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை அனைத்து கல்வி நிறுவனங்களையும் அரசாங்கமே ஏற்று நடத்தினால் இந்தக் கொள்ளையைத் தவிர்த்து விடலாமே! ஆனால் இந்தியா முழுவதும் அரசு பள்ளிகள், கல்லூரிகள் படிப்படியாக அதிக அளவில் மூடப்பட்டு வருவது தானே நடந்து வருகிறது.

## நீட் – தரத்தை உத்திவராதப்படுத்தாது

நீட் தேர்வுமூலம் மருத்துவ மாணவர் சேர்க்கை நடத்தினால்தான் தகுதி அடிப்படையில் மாணவர்களுக்கு இடம் கிடைக்கும் என்றும் இதனால்தான் மருத்துவக்கல்வியின் தரம் மேம்படும் என்றும் ஒரு தரப்பினர் வாதாடுகின்றனர். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இதுவரை +2 தேர்வு மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை நடைபெறுகிறது. அதில் கிட்டத்தட்ட 97% மதிப்பெண்ணுக்கும் அதிகமாக எடுப்பவர்களுக்கே இடம் கிடைக்கிறது. அதாவது உச்ச மதிப்பெண் பெற்றவர்களே அரசு கல்லூரிகளில் பயில்கின்றனர். அவர்கள் எல்லாம் தரமில்லாதவர்களா? தகுதி குறைவானவர்களா? இல்லை அவர்களெல்லாம் தரமான மருத்துவர்களாக வெளிவரவில்லையா? இதுகுறித்து மத்திய அரசாங்கம் ஏதாவது ஆய்வு நடத்தியதா அல்லது ஆதாரங்களை வெளியிட்டதா? அதே நேரத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கு லட்சக்கணக்கில் ஏன் கோடிகள் கொடுத்தால் என்ன மதிப்பெண் எடுத்தாலும் இடம் கிடைக்கிறது. அங்கெல்லாம் உண்மையிலேயே தரமான மருத்துவர்கள் உருவாக்கப்படுகிறார்களா? இதுகுறித்தும் ஏதாவது ஆய்வு நடத்தப்பட்டதா? உண்மையில் ஒரு மோசடித்தனம். நல்ல தகுதியிருந்தும் பணமில்லாவிட்டால் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் யாரும் சேரமுடியாது. மாறாக தரமில்லாவிட்டாலும் பணமிருந்தால் யாரும் மருத்துவம் படிக்கலாம். கட் ஆஃப் மதிப்பெண் 50% என்பதும் குறைக்க வாய்ப்பிருக்கிறது என நீட் அமைப்பே கூறுகிறது. எனவே தரமேம்பாடு என்பது ஒரு மோசடித்தனமே ஆகும்.

## வெவ்வேறு பாடத்திட்டங்கள் வெவ்வேறு பயிற்று மொழிகள்– ஓரே தேர்வா ?

நமது நாட்டில் சிபிஎஸ்இ, ஐசிஎஸ்இ, ஓரியண்டல், ஆங்கிலோ–இந்தியன் மற்றும் அந்தந்த மாநிலங்களில் மாநில கல்வித்துறை மற்றும் மெட்ரிகுலேசன் என பல்வேறு பாடத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அதே போல் பெரும்பாலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் அந்தந்த மாநிலத் தாய் மொழிகள், அதாவது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஓரியா, மராத்தி, இந்தி, குஜரத்தி, போன்ற இன்னபிற மொழிகள் பயிற்று மொழிகளாகவும் மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் இதர பள்ளிக் கல்வி முறைகளில் ஆங்கிலமும் உள்ளன. இவற்றில் சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில் இயங்கக்கூடிய பள்ளிகளில் கேந்திர வித்யாலயா மற்றும் நவோதயப் பள்ளிகள் மட்டுமே அரசாங்க நிதியில் இயங்கும் பள்ளிகளாகும். சிபிஎஸ்இ பாடத்திட்டத்தைப் பின்பற்றக்கூடிய மற்ற பள்ளிகள், அதாவது நாட்டில் ஆயிரக்கணக்கான பள்ளிகள் தனியார் சுயநிதிப் பள்ளிகளே ஆகும். அங்கு கல்விக் கட்டணங்கள் பல ஆயிரங்கள் முதல் சில லட்சங்கள் வரை வசூலிக்கப்படுகின்றன. எனவே சாமானிய மக்கள் தங்களது பிள்ளைகளை அந்துப் பள்ளிகளில் சேர்க்க இயலாது. ஆக நாடுமுழுவதும் எடுத்துக் கொண்டால் பல லட்சக்கணக்கான மாணவ மாணவியர் சிபிஎஸ்இ அல்லாத பிற பாடத்திட்டங்களில், அதிலும் பெரும்பாலோனோர் தாய்மொழி வழி வாயிலாக, அதாவது இந்தி–அல்லாத பிறமொழி வாயிலாகப் படித்துவருகின்றனர். இந்த நிலையில் இந்த தேசிய தகுதிகாண் மற்றும் நுழைவுத் தேர்வு ஒரு பொதுவான பாடத்திட்டத்தில், அதாவது சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில், நடத்தப்பட்டால் மற்ற பாடத்திட்டங்களில் படித்த லட்சோப லட்ச அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கும் பாதகத்தை ஏற்படுத்தும். அது கிட்டத்தட்ட அந்த மாணவ மாணவியர் மருத்துவப் படிப்பிற்குள் வரும் வாய்ப்பையே முற்றிலும் நிராகரிக்கும் அபாயம் உள்ளது.

ஒருவேளை அனைத்து மாநிலங்களிலும் உடனடியாக சிபிஎஸ்இ பாடத்திட்டம் கொண்டு வரப்படுவதாக ஒரு வாதத்திற்கு வைத்துக் கொள்வோம். அப்போதும் கூட 6ஆம் வகுப்பு முதல் சிபிஎஸ்இ பாடத்திட்டத்தை நடைமுறைப் படுத்துப்பட்டால் மட்டுமே 12ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு அந்தப் பாடத்திட்டத்தில் புலமை பெற முடியும். எனவே அதுவும்கூட உடனடியாகவோ அல்லது அடுத்த 6 ஆண்டுகளுக்குள்ளோ சாத்தியமாகாது. நாடு முழுவதும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசாங்கம் எதுவும் செய்யாததோடு, ஏற்கனவே கடந்த பட்ஜெட்டில் கல்விக்கு ஒதுக்கிய நிதியையும் கணிசமாகக் குறைத்துவிட்டது. பல்வேறு மாநிலங்களில் அரசாங்கப் பள்ளிகள் வெளிப்படையாகவே மூடப்பட்டு வருகின்றன. மத்தியப் பிரதேசத்தில் 1 லட்சத்து 8 ஆயிரம் அரசுப் பள்ளிகளை மூட அந்த மாநில அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. தமிழ்நாட்டிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க வேண்டும் என்று வெளியே பேசிக்கொண்டாலும் உண்மையில் பல பள்ளிகளில் மாணவர் சேர்க்கை இல்லாததால் அரசாங்கப் பள்ளிகள் கொத்துக் கொத்தாக மூடப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சாமானிய மக்கள் படிக்கும் வாய்ப்பு மெல்ல மெல்ல மறுக்கப்பட்டு வருகின்றது. தற்போது இருக்கும் நிலையில் குறைந்தபட்சம் அரசாங்கப் பள்ளியில் படித்த மாணவ மாணவியர் தங்களது +2 மதிப்பெண் அடிப்படையில் மருத்துவப் படிப்பிற்கு செல்ல வாய்ப்புள்ளது. ஆனால் மத்திய அளவிலான நுழைவுத் தேர்வு கொண்டுவரப்பட்டால் அரசுப் பள்ளிகளில், அதிலும் நகர்புற மற்றும் கிராமப்புறங்களில் படிக்கும் மாணவ மாணவியர் இனி மருத்துவப் படிப்பையே நினைத்துக்கூடப் பார்க்க முடியாத சூழல் உருவாகிவிடும்.

## நுழைவுத் தேர்வு மொழி

பொதுவாக இந்தியாவில் பல்வேறு மாநில மொழிகள் வழக்கு மற்றும் பயிற்று மொழிகளாக இருந்தபோதிலும், மத்திய அளவில் நடத்தப்படும் தேர்வுகள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே நடத்தப்படுகின்றன. மற்ற மொழிகள் புறக்கணிக்கப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில் தற்போது இந்த நீட் தேர்வும் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் நடத்தப்படும்போது, அது ஆங்கில வழியில் படித்தவர்களுக்கும் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டு படித்தவர்களுக்குமே சாதகமாக அமையும். கடும் எதிர்ப்புக்குப்பின் தற்போது ஒரு சில பிராந்திய மொழிகளில் நீட் தேர்வு நடத்தப்பட்டது. சிபிஎஸ்இ பாடத்திட்டத்தின் படி பிராந்திய மொழிகளில் பாடப்புத்தகங்களே இல்லாத நிலையில் தமிழ்நாடு, போன்ற மாநிலங்களைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு இது பாதகத்தையே ஏற்படுத்தும். எனவே நீட் என்பது ஒரு பாரபட்சத்தையே உருவாக்கும்.

## நுழைவுத் தேர்வு பயிற்சி

+2 தேர்வு முறை வேறு. நுழைவுத் தேர்வு முறை வேறு. நுழைவுத் தேர்வில் கொள்குறி வகை (objective type) தேர்வே நடத்தப்படுகிறது. இதற்கு சிறப்புப் பயிற்சிகள் தேவை. இந்தப் பயிற்சிகளுக்கு பல்லாயிரக்கணக்கில் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. பெரும்பாலும் இதுபோன்ற பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறும் மாணவ மாணவியரே வெற்றிபெறும் வாய்ப்பு பெறுகின்றனர். இப்பயிற்சிகள் பெரும்பாலும் பெருநகரங்களில் செயல்படுகின்றன. அரசு பள்ளிகளில் குறைந்த கட்டணம் என்றாலும் தனியார் பள்ளிகளில் ஏற்கனவே பல்லாயிரக்கணக்கில் கட்டணம் செலுத்தும் மாணவ மாணவியர் இனி நுழைவுத் தேர்வுக்கும் பணம் செலவழிக்க வேண்டும். இதனால் வசதி குறைவானவர்கள், கிராமப்புறத்து மாணவ மாணவியர் வாய்ப்பிழக்க நேரிடும்.

## இடஓதுக்கீடு நிலைமை

நமது நாட்டில் மத்திய அளவில் பொதுப்பிரிவு, இதர பிற்பட்டோர் பிரிவு (ஓபிசி) மற்றும் எஸ்சி, எஸ்டி என்ற வகையும் மாநில அளவில் ஒவ்வொரு மாநிலத்திற்கு ஒவ்வொரு பிரிவாகவும் உள்ளது. உதாரணத்திற்கு தமிழ்நாட்டில் பொதுப்பிரிவு, பிசி, எம்பிசி, பிசி(முஸ்லீம்) டிஎன்சி, எஸ்சி, எஸ்டி என பல்வேறு வகையாகப் பிரித்து இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களிலும் வெவ்வேறான இட ஒதுக்கீடு பின்பற்றப்படுகிறது. அப்படி இருக்கையில் நீட் தேர்வு முடிவுகள் இட ஒதுக்கீடு அடிப்படையில் வெளியிடப்படுமா? அப்படி இட ஒதுக்கீடு பின்பற்றப்பட்டால் மத்திய அளவிலான இட ஒதுக்கீடு பின்பற்றப்படுமா அல்லது மாநிலங்கள் அளவிலான இடஒதுக்கீடு பின்பற்றப்படுமா? இது குறித்து எந்தத் தெளிவான அறிவிப்பும் இல்லை. இதில் ஏற்கனவே கிராமப்புறங்களில் பணியாற்றும் அரசு மருத்துவர்களுக்கு தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரிகளில் முதுநிலைப் படிப்பில் சேர்வதற்கு வழங்கப்பட்ட 15% இட ஒதுக்கீட்டை ரத்து செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வெவ்வேறு மாநிலங்களுக்கு வெவ்வேறு கேள்வித்தாள் – எப்படி ஓரே தேர்வாகும் ?

இந்நிலையில் சமீபத்தில் நடைபெற்ற நீட் தேர்வில் வெவ்வேறு மாநிலங்களுக்கு வெவ்வேறு கேள்வித்தாள்கள் வழங்கப்பட்டதாகப் புகார் எழுந்துள்ளது. தேசிய அளவில் நடத்துப்படும் தேர்வில் வெவ்வேறு கேள்வித்தாள் பயன்படுத்துப்பட்டால் அது எப்படி ஓரே தேர்வாகும். மத்தியில் ஆட்சியில் இருப்பவர்களுக்கு வேண்டப்பட்ட மாநிலங்களுக்கு எளிதான கேள்வித்தாளையும் தங்களை வெறுக்கும் மாநிலங்களுக்கு கடினமான கேள்வித்தாளையும் கொடுக்க வாய்ப்பிருக்கிறதே! வெவ்வேறு கேள்வித்தாள்கள் அடிப்படையில் நடைபெறும் தேர்வில் எப்படி ஒரே தகுதியை நிர்ணயிப்பார்கள்?

## பொதுப்பட்டியலில் உள்ள கல்வியை மத்தியப் பட்டியலுக்குக் கொண்டு செல்லும் சதி

தற்போது கல்வி என்பது மத்திய மற்றும் மாநிலங்களின் பொதுப்பட்டியலில் உள்ளது. மத்திய அளவிலான கல்வி நிறுவனங்களோடு அனைத்து மாநிலங்களும் தங்களுக்கென்று கல்வி வாரியங்களையும் வைக்க அரசியலமைப்புச் சட்டம் வழிவகை செய்கிறது. இதனடிப்படையில் மாநிலங்களும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை நடத்தி வருகின்றன. அவற்றிற்கு மாணவர் சேர்க்கையையும் அந்தந்த மாநில அரசுகளே முடிவு செய்கின்றன. இச்சூழ்நிலையில் மாநில அரசாங்கங்களிடமுள்ள இடங்களை மத்திய நுழைவுத்தேர்வு மூலம் மட்டுமே நிரப்ப வேண்டும் என்பது மாநிலங்களின் அதிகாரத்தைப் பறிக்கும் செயலே ஆகும்.

ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள பிரத்யேக அரசியல் விழிப்புணர்வு சூழலுக்கு ஏற்ப அந்தந்த மாநில அரசாங்கங்கள் மக்கள் வரிப்பணத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கியுள்ளன.

தொடர்ச்சி 10ம் பக்கம்

## மாபெரும் நவம்பர் புரட்சி

# சோசலிசப் புரட்சிகளுக்கான கலங்கரை விளக்கமாக நவம்பர் புரட்சி இன்றும் ஒளிவீசிக்கொண்டிருக்கின்றது

[உலகத்தின் முதல் சோசலிச அரசான சோவியத் யூனியன் (யுஎஸ்எஸ்ஆர்) உருவாவதற்கு அடித்தளமிட்ட வரலாற்று சிறப்பு மிக்க நவம்பர் புரட்சியின் நூற்றாண்டு தினத்தையொட்டி எமது ஆங்கில ஏடான புரொலிடேரியன் எராவானது (Proletarian Era), மனித இன வரலாற்றில் சகாப்தம் படைத்த இந்த நிகழ்வின் வரலாறு, படிப்பினைகள் மற்றும் அந்நிகழ்விற்கு உலகளாவிய அளவில் எழுந்த ஆதரவு குறித்த பல்வேறு கட்டுரைகளை வெளியிட முடிவு செய்துள்ளது.

இங்கே, பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் லெனின் அவர்கள், நெளிவு சுழிவு மிக்கதும் கடினமானதுவுமாக இருந்த போதிலும் உறுதியுடன் அதனை நன்றாகப் புரிந்து கொண்டு அதன் போக்கினை மிகச்சரியாகக் கட்டியமைத்ததின் மூலம் போல்ஷ்விக் கட்சியை நிறுவி அதன் தலைமையில் புரட்சியை நடத்திடு வதற்கான தயாரிப்பு வேலைகள் மேற்கொண்டது குறித்த கட்டுரைகளை தொடர்ச்சியாக வெளியிட நாங்கள் துவங்கியிருக்கின்றோம்.]

மனித இன வரலாற்றில் நடைபெற்ற புரட்சிகள் யாவும் மைல் கற்களாகும். நமது நிலவுலகை உலுக்கிய அனைத்து அரசியல்–பொருளாதார புரட்சிகளி னின்று தனித்து நிற்பது பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் மாபெரும் மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ்ஸின் மதிப்பு மிக்க மாணாக்கருமாகிய தோழர் விளாடிமிர் இலிச் லெனின் அவர்கள் வழிநடத்திய ரஷ்யாவின் மாபெரும் நவம்பர் புரட்சியாகும். காரணம், காலம் காலமாக அவமதிக்கப்பட்டு சுரண்டலுக்குட்பட்டு அல்லற் பட்டுக்கொண்டிருந்த மக்களை சுரண்டலிலிருந்து விடுவித்ததை கட்டியம் கூறியதன் மூலம் இப்புரட்சியானது பிறவற்றிலிருந்து மிகவும் மாறு பட்டு நிற்பதுதான். எனவே, உரிய மரியாதையுடன் இத்தகைய மாபெரும் நவம்பர் புரட்சியின் நூற்றாண்டை அனுஷ்டிக்கும் இவ்வேளையில், அதனை வெறும் சடங்காக ஒருபோதும் அனுஷ்டிக் கலாகாது என்பதையும் நாம் மறந்திடக்கூடாது.

உலக முதலாளித்துவ சங்கிலியை உடைத்தெறிந்து, அங்கிருந்த முதலாளித்துவ அரசு இயந்திரத்தை தூக்கியெறிந்து, ரஷ்யாவில் முதல் சோசலிச அரசை நிறுவிய மாபெரும் நவம்பர் புரட்சியானது திடீரென தானாக நடந்த ஒன்றல்ல. இப்புரட்சி யானது, ஒரு புரட்சிகர கருத்தியலுக்கு யதார்த்தத்தில் எங்ஙனம் ஸ்தூலமாக வடிவம் தர முடியும் என்பதற்கான ஒரு தனித்தன்மை வாய்ந்த உதாரணமாகும். எண்ணிப்பார்த்திட முடியாத அளவிற்கு பின்தங்கியிருந்த ரஷ்யா போன்ற நாட்டை இருபதே ஆண்டுகளில் ஒவ்வொரு அம்சத்திலும் முன்னேற்றிக்காண்பித்த அப்புரட்சியை நிறைவேற்றிக்காண்பித்ததின் வாயிலாக மாபெரும் புரட்சிகர சிந்தனையாளரும் பாட்டாளிவர்க்கத்தின் தலைவரும் ஆசானுமாகிய தோழர் லெனின் அவர்கள் நூறாண்டுகளுக்கு முன்னரே இதனை நிரூபித்திருக்கின்றார். மாபெரும் லெனினது மதிப்புமிக்க மாணவரான மாபெரும் ஸ்டாலின் அவர்களின் சரியான தலைமையிலான யுஎஸ்எஸ்ஆர், ஹிட்லரின் பாசிசத்திற்கு படு தோல்வியை ஏற்படுத்தி, வரவிருந்த ஆபத்திலிருந்து மனித இனத்தை பாதுகாத்தது மட்டுமின்றி, துவண்டுபோயிருந்த, போரினால் பாதிக்கப் பட்டிருந்த விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு பெருமளவிலான நிவாரணங்களை கொண்டு வந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, அது மரியாதைமிக்க மற்றும் கௌரவமிக்க வாழ்வினை அவர்களுக்கு அளித்தது.

மார்க்சிய சித்தாந்தத்தை பெருமளவில் திரித்துக்கூறுவது, மார்க்சிசம்–லெனினிசத்திற் கெதிராக கடுமையான அவதூறுப் பிரச்சாரம் செய்வது, சோசலிசத்திற்கெதிராக பொய்யான தீங்குப்பிரச்சாரங்களை மேற்கொள்வது மற்றும் ரஷ்யப் புரட்சியின் சிற்பிகளை அவதூறாகப் பேசுவது போன்ற அனைத்தையும் முதலாளித்துவ ஏகாதிபத்திய மற்றும் திருத்தல்வாதிகள் செய்துவரும் இன்றைய சூழ்நிலைமையில், நவம்பர் புரட்சியி லிருந்து சரியான படிப்பினைகளை எடுத்துக் கொள்வதும் தற்போதைய சிக்கலான உலக சூழ்நிலைமையில் அப்படிப்பினைகளை ஆக்கபூர்வ மாகவும் துணிச்சலுடனும் பிரயோகித்து, அவரவர்கள் தத்தம் நாடுகளில் புரட்சியினை நடத்திட சாத்தியமாக்கிடுவதும் இன்றியமையாததாகும்.

விஞ்ஞானத்தின் பல்வேறு பிரிவுகளும் சமூக விஞ்ஞானங்கள் திரட்டியவைகளும் கண்டுபிடித்த இப்பொருளாய உலகின் (Material World) குறிப்பிட்ட உண்மைகளை ஒப்பிட்டு, ஒருங்கிணைத்து, பொதுமைப்படுத்தி இயக்கவியல் பொருள்முதல் வாதம் (Dialectical Materialism) எனும் விஞ்ஞான தத்துவத்தை மனித இன வரலாற்றில் முதன் முதலாக மாபெரும் மார்க்ஸ் அவர்கள்தான் வளர்த்தெடுத்தார். பொருளாய உலகின் மற்றும் சமூக வளர்ச்சியின் வளர்ச்சி விதிகளை கண்டுபிடித்து பரிசோதனை அடிப்படையில் சரிபார்க்கப்பட்ட உண்மையினடிப் படையில், பொருளாய உலகையும் வரலாற்றையும் சரியாக விளக்கியுரைத்திட மட்டுமின்றி உலகை மாற்றிடுவதற்கான விஞ்ஞானபூர்வ, பொருள் முதல்வாத மற்றும் வரலாற்று ரீதியில் தீர்மானிக்கப்பட்ட போக்கினை காண்பித்திடக் கூடிய முழுமையான, விஞ்ஞான, உலக கண்ணோட்டத்தினை முதன் முறையாக மார்க்ஸ் அவர்கள் வளர்த்தெடுத்தார். மார்க்சிசம் என்பது ஒரு வறட்டுவாதமல்ல, அது செயல்பாட்டிற்கான ஒரு வழிகாட்டியாகவும் மற்றும் அனைத்து விஞ்ஞானங்களின் விஞ்ஞானமாகவும் இருக்கின்றது.

பூர்ஷ்வா சமூகமே அதன் உள்ளிருக்கும் பூர்ஷ்வாக்களுக்கும் பாட்டாளிகளுக்குமிடையேயான பகைமுரண்பாட்டையும் அதனடிப்படையில், வர்க்கப் போராட்டத்தையும் உருவாக்கிடும் என்பதையும், ஒரு புரட்சிகர கருத்தியல் மற்றும் கலாச்சாரத்தினடிப்படையில் பாட்டாளி வர்க்கம் ஒன்றிணைந்து முதலாளித்துவ அமைப்பிற் கெதிரான ஒரு போராட்டத்தில் அவர்களே தங்களை ஈடுபடுத்திக்கொண்டு அதனைத் தூக்கியெறிந்து சோசலிசத்தை நிறுவிடுவார்கள் என்பதை மார்க்ஸ் அவர்கள்தான் சுட்டிக் காண்பித்தார். இத்தகைய போராட்டத்தின் போக்கில் வர்க்கப்போராட்டத்தை உக்கிரப்படுத்தி முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிச புரட்சிகளை நிறைவேற்றுவதன் வாயிலாக மனித சமூகமானது சோசலிச அமைப்பினுள் அடியெடுத்து வைத்து, இறுதியில் வர்க்க பேதமற்ற கம்யூனிச சமூகத்திற்கு சென்றடையும் என்பதனை மார்க்ஸ் அவர்கள் தான் கணித்தார்.

பாட்டாளிவர்க்கம் உருவானது சமுதாயத்தின் மீது ஏற்பட்ட தழும்பல்ல. மாறாக, அவர்கள்தான் உழைப்பிற்கும் மூலதனத்திற்குமிடையேயான அதன் பிரதான பகை முரண்பாட்டிலிருந்து முதலாளித்துவ சமூகத்தை விடுவித்திடுவதற்கான புரட்சியினை வழிநடத்திட வரலாற்றுரீதியில் உருவான மிகவும் முன்னேறிய வர்க்கமாகும். இவ்வாறாக, ஈவிரக்கமற்ற சுரண்டல் முதலாளித் துவத்தை தூக்கியெறிந்து, மூலதனத்தின் பிடியிலிருந்து பொருளாய மற்றும் சிந்தனை உலகங்கள் இரண்டினையும் விடுவிப்பதின் மூலம் ஒரு புதிய விடியலை முன்னறிவிக்கக்கூடிய பாட்டாளிவர்க்கத்தின் கைகளில் இருக்கின்ற ஓர் வெல்லற்கரிய ஆயுதம் மார்க்சிசமாகும்.

கார்ல் மார்க்ஸ் அவர்களின் போதனைகள், தேசிய எல்லையைக் கடந்து உலகம் முழுவதிலும் சென்று பரவியிருக்கின்றது. சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையின் பிடியிலிருந்து விடுதலையடைந் திடுவதற்கான ஒரு புதிய பார்வையுடன், ஒரு புதிய நம்பிக்கையுடன் மற்றும் ஒரு புதிய வழிகாட்டுதலுடன் அது உழைக்கும் வர்க்கத்தினை தட்டியெழுப்பியது. அவரது மதிப்புமிக்க மாணாக்கராகிய லெனின் அவர்கள்தான் உலகத்தின் முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியினை நிறைவேற்றி, முதல் சோசலிச அரசினை நிறுவியதன் வாயிலாக மார்க்சிசம் சரியானதென்பதை நிரூபித்தார்.

ஏகாதிபத்தியத்தின் மற்றும் பாட்டாளிவர்க்கப் புரட்சியின் மாறிய சகாப்தத்தில் மார்க்சிசத்தை ஸ்தூலப்படுத்தியதன் போக்கில், மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் ஆகியோரால் வளர்த்தெடுக்கப்பட்ட அறிவாதார களஞ்சியங்களை உட்கிரகித்து மார்க்சிச முறையியலை ஈர்த்துக்கொண்டதன் வாயிலாக லெனின் அவர்கள் மார்க்சிச தத்துவ கருவூலத்திற்கு அடிப்படையான பங்களிப்புக்களை தந்து செழுமைப்படுத்தி அதனை மேலும் வளர்த்தெடுத்தார். ஆக, லெனினிசமே, ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளிவர்க்கப் புரட்சி சகாப்தத்தின் மார்க்சிசம் என்பதை ஸ்டாலின் அவர்கள் சுட்டிக் காண்பித்தார்.

இதன் பின்னணியில், மாபெரும் நவம்பர் புரட்சியின் போக்கினை நாம் விரிவாக விளக்கியுரைப்போம்.

### புரட்சிக்கு முந்தைய இரஷ்யா

கொடுங்கோல் ஜார் அரசாட்சியின் கீழான, பெரும்பான்மையான விவசாயத்தைக் கொண்டிருந்த இரஷ்யாவில் முதலாளித்துவமானது மெல்லமெல்ல வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. மார்க்சிசமும் கூட, அங்கு ஊடுருவி இரஷ்யாவின் பாட்டாளி வர்க்கத்தை அவர்களின் போராட்டங்களையும் அவர்களின் சொந்த போராட்ட அமைப்புக்களையும் கட்டிட ஈர்த்திட்டது. லெனின் அவர்கள் கூறியது போல: மார்க்ஸ் ஏங்கெல்ஸ் ஆகிய இருவரும் இரஷ்ய மொழியினை தெரிந்து கொண்டிருந்ததால், இரஷ்ய நூல்களை படித்தறிந்திருந்ததினால், அந்நாட்டில் உயிரோட்டமான ஆர்வம் எடுத்துக் கொண்டு இரஷ்ய புரட்சிகர இயக்கத்தினை பரிவுடன் பின்தொடர்ந்து இரஷ்யப் புரட்சியாளர் களுடனான தொடர்பை பராமரித்து வந்தனர். *(ஃபிரடரிக் ஏங்கெல்ஸ் குறித்து, தொகுப்பு நூல்கள், தொகுதி 2, பக்கம் 19)*

இருப்பினும், இரஷ்யாவில் மார்க்சிய குழுக்கள் தோன்றுவதற்கு முன்பாக, நரோடிசம் என்பதன் செல்வாக்கில் ஜார் ஆட்சிக்கெதிரான போராட்டங் கள் நடைபெற்றன. நரோட்னிக்குகள், பயங்கர வாதத்தை துரிதப்படுத்தி தனி நபர்களை கொல்வதன் மூலம் ஜார் ஆட்சியை அழித்துவிட முடியும் என நினைத்தார்கள். ஜார் ஆட்சியை தூக்கியெறிந்திட ஒரு சிலர் வீரதீரச்செயல்களில் ஈடுபட்டால் போதுமென அவர்கள் நினைத்தார்கள். வெகுஜனங்கள் செய்வதற்கு பெரிதாக ஒன்றுமில்லையென எண்ணினார்கள். மாபெரும் ஸ்டாலின் அவர்கள் கூறியது போல, நரோடிசத்தின் அடிப்படையென்பது, 'செயல்தீரமிக்க வீரதீரர் களையும் செயலற்ற மக்கள் திரளையும்' கொண்டி ருப்பதாகும். இவ்வாறாக, நரோட்னிக்குகள் பாட்டாளிவர்க்கத்தின் புரட்சிகர தலைமையையும் மற்றும் அவர்கள் தங்களின் சொந்த கட்சியை கொண்டிருப்பதின் அவசியத்தையும்கூட மறுதலித் தார்கள். எனவே, அவர்களின் சிந்தனைகள் யாவும் அப்பட்டமாக புரட்சிக்கு எதிரானதாகவே இருந்தன.

முதல் இரஷ்ய மார்க்சிய குழுவான 'உழைப்பின் விடுதலை' (Emancipation of labour) என்பது ஜெனீவாவில் 1883ல் ஜி வி பிளக்கனோவ் என்பவரால் அவர் நாடு துரத்தப்பட்டிருந்தபோது உருவாக்கப்பட்டது. முன்னதாக அவர் ஒரு நரோட்னிக்காக இருந்தார். ஆனால், மார்க்சிசத்தை கற்றறிந்திருந்ததினால், அவர் நரோடிசத்தி லிருந்து முறித்துக்கொண்டு மார்க்சிசத்தின் ஓர் முனைப்பான பிரச்சாரகராக ஆகினார். மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் ஆகியோரது கம்யூனிஸ்ட் அறிக்கையையும் அதன் முன்னுரையையும் மற்றும் அத்தகைய மாபெரும் தலைவர்களின் பிற கட்டுரைகளையும் இரஷ்ய மொழியில் மொழி பெயர்த்தார். கூடவே, பிளக்கனோவ் அவர்கள் நரோட்னிக் சித்தாந்தத்திற்கு எதிரான மார்க்சிச கண்ணோட்டம் குறித்த என்னற்ற கட்டுரைகளை எழுதினார். அதனடிப்படையில் அவர் வழிநடத்திய உழைப்பின் விடுதலை எனும் குழுவானது, நரோடிசத்திற்கெதிரான தீவிர சித்தாந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்துச்சென்றதால் நாடு முழுவதிலும் பரந்துபட்ட அளவில் மார்க்சிசம் பரவிட அது உதவி புரிந்தது. பிளக்கனோவின் கட்டுரைகளில் குறிப்பிட்ட முக்கியத்துவம் வாய்ந்த 'வரலாற்றின் பொருண்மைவாத (Monist) பார்வையின் வளர்ச்சி குறித்து' என்ற கட்டுரையை லெனின் அவர்கள், "ரஷ்ய மார்க்சிசவாதிகளின் தலைமுறை முழுமையையும் வளர்த்தெடுத்திட்டது" எனக் குறிப்பிட்டார். (தொகுப்பு நூல்கள், இரஷ்ய பதிப்பு, தொகுதி 14).

நரோடிசத்தை அம்பலப்படுத்தியதன் மூலம் இரஷ்யாவில் மார்க்சிசம் நிச்சயமாக முன்னேறிச் சென்றது. ஆனால், பிளக்கனோவ் அவர்கள்

தொடர்ச்சி 4ம் பக்கம்

மாபெரும் நவம்பர் புரட்சி

# முதலாளித்துவம் – ஏகாதிபத்தியத்தை தகர்த்தெறிந்து சோசலிசத்தை நிறுவிடுவீர்

3ம் பக்கத் தொடர்ச்சி

மிகவும் கடுமையான சில தவறுகளைப் புரிந்து விட்டார். அவரது தீவிர சித்தாந்தப் போராட்டங்கள் நரோடிசத்திற்கெதிராக இருந்தபோதிலும், அவரது கருத்துக்கள் நரோடிச பார்வையின் மிச்ச சொச்சங்களைக் கொண்டிருந்தது: அது தனிநபர் தீவிரவாதத்துடன் ஒத்துப்போய் அதற்கு ஆதரவளிப்பதாக இருந்தது. மேலும், பிளக்கனோவ் அவர்கள் உழைக்கும் வர்க்கம் தலைமையேற்கவிருக்கும் புரட்சியில் விவசாயத் தொழிலாளர்கள் இணைந்து ஆற்ற வேண்டிய பாத்திரம் குறித்த தெளிவான புரிதலை வளர்த்தெடுக்கத் தவறிவிட்டார். மாறாக, தாராளவாத பூர்ஷ்வாக்களை உழைக்கும் வர்க்கத்தின் நலன்களை உயர்த்திப்பிடிக்க உதவிட முடியும் சக்தியாக கருதினார். அனைத்திற்கும் மேலாக, அப்போது இரஷ்யாவிலிருந்த பிற மார்க்சிச குழுக்களைப்போன்றே அவரது உழைப்பின் விடுதலை என்ற குழுவும் இம்மண்ணில் உழைக்கும் வர்க்க இயக்கத்தின் ஸ்தூலமான அனுபவம் எதனையும் கொண்டிருக்கவில்லை.

உழைப்பின் விடுதலை குழுவின் தவறுகளிலிருந்து இரஷ்ய உழைக்கும் வர்க்கத்தின் போராட்டத்தை விடுவித்திட வேண்டிய மற்றும் மார்க்சிசத்தின் ஆழமான அடிப்படையில் அதனை வளர்த்தெடுத்திடும் கடமையானது லெனின் மீது விழுந்தது. வெறும் 18 வயதே நிரம்பிய ஒரு மாணவனாக இருந்தபோது, புரட்சிகர மாணவர் இயக்கத்தில் பங்கெடுத்ததற்காக லெனின் கைது செய்யப்பட்டு காசான் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர் அவர் ஃபெடோ செயேவ் என்பவர் உருவாக்கிய ஒரு மார்க்சிசவாதிகள் வட்டத்தில் இணைந்தார். அதன் பின்னர் அவர் சமாரா என்ற இடத்திற்கு இடம்பெயர்ந்த உடனேயே அங்கு முதல் மார்க்சிய வட்டத்தை ஏற்படுத்தினார். 1893ஆம் ஆண்டில், லெனின் அவர்கள் செயின் பீட்டர்ஸ் பர்க் –க்கு சென்றார். 1895ல் உழைக்கும் பல்வேறு மார்க்சிச வட்டங்களை ஒன்றிணைத்த உழைக்கும் வர்க்க விடுதலைக்கான போராட அணி (League of Struggle for the Emancipation of Labour) என்ற ஒரே போராட்ட குழுவினை அமைத்து தொடர்ச்சியான வெகுஜன இயக்கங்களை கட்டியமைக்கத் துவங்கினார்.

லெனின் அவர்கள்தான் அந்நாட்டின் உழைப்பாளர் இயக்கங்களில் விஞ்ஞான சோசலிசத்தின் போதனைகளை அறிமுகப்படுத்தினார். நரோடிசம் இன்னும்கூட இரஷ்யாவில் அதன் மிச்சசொச்ச செல்வாக்கினை கொண்டிருந்தது. இத்தகைய சித்தாந்தத்தின் தவற்றினை லெனின் அவர்கள் அவரது பிரசித்தி பெற்ற நூலான " 'மக்களின் நண்பர்கள்' (Friends of People) என்னவாயிருக்கின்றனர் மற்றும் 'சமூக ஜனநாயகவாதிகளை' அவர்கள் எப்படி எதிர்த்துப் போராடுகின்றனர்" எனும் நூலில், விரிவாக எடுத்துரைத்திருக்கின்றார். அந்நேரத்தில், பிளக்கனோவ் தலைமையிலான குழுவையும், இரஷ்யாவிலிருந்த அனைத்து மார்க்சிய குழுக்களையும் வட்டங்களையும் ஒன்றிணைத்து ஒரே சமூக ஜனநாயக கட்சியாக உருவாக்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன. (அன்றைய நாட்களில் சந்தர்ப்பவாத சமரசத்தன்மை கொண்ட சமூக ஜனநாயகத்தின் குணாம்சம் இன்னும் அம்பலமாகாமல் அவர்கள் கம்யூனிச போராட்டத்தை இன்னும் கைவிடாமல் இருந்தனர். உண்மையில், அப்போது கம்யூனிஸ்டுகள் யாவரும் சமூக ஜனநாயகவாதிகள் என்றே அறியப்பட்டிருந்தனர்.)

அதுபோன்ற நெருக்கடியான நேரத்தில், 1897ல் லெனின் அவர்கள் கைது செய்யப்பட்டு சைபீரியாவிற்கு நாடு கடத்தப்பட்டார். அங்கிருந்தும்கூட, அவர் தோழர்களுடன் தொடர்பினை ரகசியமாக பராமரித்துக்கொண்டு எண்ணற்ற கட்டுரைகளை எழுதினார். இரஷ்யாவில் தொழிலாளர் இயக்கங்களில் பொருளாதாரவாதத்தை நோக்கிய போக்கானது வளர்ந்துகொண்டிருந்த காலமது. அதன் விளைவாக, அரசியல் கருத்தியல்கள் மீதான விவாத மற்றும் வாத நடைமுறையை தவிர்த்திடும் போக்கும் மற்றும் ஒரு உழைக்கும் வர்க்கக் கட்சியை உருவாகுவதை நோக்கிய முயற்சியும்கூட தவிர்க்கப்பட்டு தொழிலாளர்கள் யாவரும் பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இப்போக்கினை எதிர்த்து லெனின் அவர்கள் சைபீரியாவிலிருந்து எழுதினார்.

## இஸ்க்ரா தோன்றியது

லெனின் அவர்கள் உருவாக்கிய உழைக்கும் வர்க்க விடுதலைக்கான போராட்ட அணியானது இரஷ்ய மண்ணில் பாட்டாளிவர்க்கத்தின் ஒரு புரட்சிகர கட்சி உருவாவதற்கான அடித்தளமாக விளங்கியது. இரஷ்யாவில் பல நகரங்களில் வளர்ந்த அவ்வணியின் பல்வேறு பிரிவுகள் யாவும் ஒரு ஒன்றுபட்ட பாட்டாளிவர்க்க கட்சியை வளர்த்தெடுக்கும் ஒரே நோக்கத்தினைக் கொண்டிருந்தது.

மார்ச் 1898ல் போலீசாரின் கண்காணிப்பை ஏமாற்றி ஒரு சில சமூக ஜனநாயக அமைப்புகளின் பிரதிநிதிகள் மின்ஸ்க் நகரத்தில் நடந்த முதல் மாநாட்டில் ஒன்றுகூடினர். அம்மாநாடு இரஷ்ய சோசலிச சமூக ஜனநாயக உழைப்பாளர் கட்சியினை (ஆர் எஸ் டி எல் பி) துவங்குவதென முடிவு செய்தது. லெனின் நாடு கடத்தப்பட்டிருந்ததால் அக்கட்சியானது துவக்கப்படவில்லை. உண்மையில் அவர் அங்கு இல்லாதிருந்தது அம்மாநாட்டின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதில் சிரமங்களை ஏற்படுத்தியது. மத்திய தலைவர்கள் யாவரும் போலீசாரால் விரைவிலேயே கைது செய்யப்பட்டனர். பல்வேறு சமூக ஜனநாயக அமைப்புகளும் தங்களது சொந்த வழியில் தனித்தனியாக அவர்களின் வேலைகளை தொடர்ந்து வந்தனர்.

லெனின் அவர்கள் நாடு கடத்தப்பட்டிருந்த நிலையில், அனைத்து புரட்சிகர சமூக ஜனநாயக அமைப்புகளையும் ஒன்றிணைத்து ஒரே கட்சியாக அமைப்பதற்கான விரிவான திட்டத்தை வகுத்தார். கூடவே, நீண்டு பரந்து விரிந்த இரஷ்யாவில் பரவிக்கிடக்கும் மார்க்சிச குழுக்கள் மற்றும் அமைப்புக்களிடையே உயிரோட்டமான தொடர்பினை ஏற்படுத்த உதவிட முடிகின்ற, அதன் மூலமாக ஒரு கட்சியை இலகுவாக கட்டிட ஏதுவாக இருக்கக்கூடிய ஒரு அரசியல் ஏட்டினை வெளியிட வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தார்.

டிசம்பர் மாதம் 1900ல் நாடு திரும்பிய பின்னர், லெனின் அவர்கள் பிளக்கனோவுடன் ஒன்றிணைந்து இஸ்க்ராவின் (தீப்பொறி) முதல் பத்திரிகையை வெளியிட்டார். அதன் முதற் பக்கம் பெருஞ்சிறப்பு மிக்க தலைப்பைக் கொண்டிருந்தது: இத்தீப்பொறியானது ஒரு தீச்சுவாலையை பற்றவைத்துவிடும்.

இஸ்க்ரா பத்திரிகையானது இரஷ்யாவிற்கு வெளியே அச்சிடப்பட்டு, அரசு நிர்வாகத்தின் கண்காணிப்பை ஏமாற்றி, நாட்டினுள் அனைத்து முன்னெச்சரிக்கையுடன் கொண்டுவரப்பட்டது. அது எவர்கையிலாவது இருப்பதைப் பார்த்துவிட்டால் அவர் ஜார் ஆட்சியின் சிறைவாச உத்தரவிற்கு நிச்சயம் ஆட்படுவார், அல்லது நாடு கடத்தப்படுவார். ஆனால், அதுபோன்ற அனைத்து அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் இருந்தபோதிலும் இஸ்க்ரா பத்திரிகையின் சுற்றை நிறுத்த முடியவில்லை. அப்பத்திரிகையின் வெளியீடுகள் இரஷ்ய நாடு முழுவதும் சென்றடைந்தது. பெரு நகரங்களிலும் சிறு நகரங்களிலும் ஒன்றன் பின் ஒன்றாக வாசகர்களின் மற்றும் ஆதரவாளர்களின் கூட்டமைப்பும் வேகமாக உயர்ந்தது. ட்ரான்ஸ்–காகாசியா பிராந்தியத்தின் அத்தகைய அமைப்பின் தலைவராக ஸ்டாலின் இருந்தார். அதன் பின்னர், ஜார்ஜியாவிலிருந்து வெளியிடப்பட்ட மற்றுமொரு அரசியல் பத்திரிகையான பிராட்சோலா (போராட்டம்) விற்கு ஸ்டாலின் பதிப்பாளராக இருந்தார்.

## ஆர் எஸ் டி எல் பி யின் தோற்றம்

இஸ்க்ரா பத்திரிகையின் வெற்றியானது லெனின் அவர்களால் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டதால், அது கட்சியின் இரண்டாவது மாநாடு நடைபெறுவதற்கு வழிவகுத்தது. 1903ஆம் ஆண்டு லண்டனில் அது நடைபெற்றது. அம்மாநாட்டின் பிரதான நோக்கம் கட்சியின் திட்டத்தை தீர்மானிப்பதாகவும் அதனை ஏற்றுக்கொள்வதாகவும் இருந்தது. ஆர் எஸ் டி எல் பி யின் லண்டன் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்கள் யாவும் தெளிவாக பாட்டாளிவர்க்கத்தின் ஒரு புரட்சிகர கட்சியின் போர்க்குணமிக்க இயக்கங்களுக்கான திட்டங்களாகவே இருந்தன. அதன் இலக்காக, அக்கட்சி அறிவித்தது: உற்பத்தி சாதனங்களின் மீதான தனிநபர் உரிமையை ஒழிப்பதும் மனிதனை மனிதன் சுரண்டுவதையும் அத்துடன் இருக்கின்ற வர்க்கப் பிளவுகொண்ட சமுதாயத்தை முற்றிலும் ஒழித்துக்கட்டுவதும்தான். சுருங்கக்கூறின், கட்சியின் இறுதி இலக்கானது, முதலாளித்துவத்தை தூக்கியெறிவதும் சோசலிசத்தை நிறுவுவதுமாகும். இத்தகைய இலக்குகளை அடைந்திட, அத்திட்டமானது உறுதி செய்யப்பட்டு, சோசலிசப் புரட்சியானது நிறைவேற்றப்பட்டாக வேண்டும். அதன் உடனடி நோக்கம், ஜார் ஆட்சியை தூக்கியெறிவதாக இருந்தது.

ஆனால், வெறுமனே ஒரு திட்டத்தை வகுத்தெடுப்பது போதுமானதாக இருக்கவில்லை. கட்சியின் அமைப்பு ரீதியிலான கட்டமைப்பு எப்படியிருக்க வேண்டும் மற்றும் புரட்சியை நிறைவேற்றிட கட்சியானது தனது பொறுப்புக்களை எப்படி ஆற்றப்போகின்றது என்பது குறித்த தெளிவான திட்ட வரையறையை தலைமை வழங்கிடுவது உடனடியாகத் தேவைப்பட்டது. கட்சியின் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை தீர்மானித்திட வேண்டியதும்கூட அவசியமாக இருந்தது. ஆனால், இரண்டாவது மாநாட்டில் இவ்விஷயங்கள் குறித்து தீவிர கருத்து வேறுபாடுகள் தோன்றின. எவர் உறுப்பினராயிருக்க முடியும் மற்றும் எவர் உறுப்பினராக இருக்கக்கூடாது என்பதுதான் பிரதான வேறுபாடாக இருந்தது. இவ்வேறுபாடுகள் காணப்பட்டதிலிருந்து இரு குழுக்கள் தோன்றின. லெனின் அவர்களின் தலைமையிலான பெரும்பான்மை குழு போல்ஷ்விக் என்றும் சிறுபான்மையாயிருந்தவர்கள் மென்ஷ்விக் என்றும் அழைக்கப்பட்டனர். ஆரம்பத்தில் பிளக்கனோவ் லெனின் பக்கமிருந்தார். பின்னர் அவர் மென்ஷ்விக்குகள் பக்கம் சென்றுவிட்டார்.

வேலை நிறுத்தத்தில் பங்கெடுக்கும் ஒவ்வொரு தனி நபரும் தன்னை ஒரு கட்சி உறுப்பினராக அவரே அறிவித்துக்கொள்ளும் உரிமை கொடுக்கப்படல் வேண்டும் என்பது மென்ஷ்விக்குகளின் கோரிக்கையாகும்; பல்வேறு குழுக்கள் மற்றும் தனிநபர்களுக்கு கட்சி மீதான தனிப்பட்ட கருத்துக்கள் இருந்தாலும், அவர்களுக்கு கட்சி உறுப்பினர் தகுதி வழங்கியாக வேண்டும் மற்றும் சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனும் கோட்பாட்டை நீக்கிட வேண்டும் என்றனர். மென்ஷ்விக்குகள் மத்தியத்துவக் கொள்கைக்கு (சென்ட்ரலிசம்) எதிராயிருந்தனர். அவர்கள் ஒருவர் தன்னை சுயமாக ஒழுங்குபடுத்திக்கொள்ளும் தனிநபர் சிந்தனையை ஆதரித்தனர். அவர்கள் ஒரு கட்டுக் கோப்பற்ற அமைப்பான குவோடிஸ்ட் வகை கட்சியைப் போன்றதொரு கட்சியை ஏற்படுத்திட விரும்பினர். உண்மையில், இரஷ்யாவானது அந்நேரத்தில் பூர்ஷ்வா–ஜனநாயகப் புரட்சியின் ஆரம்பக்கட்டத்தில் இருந்தது. மேலும் பூர்ஷ்வா சிந்தனையாளர்கள், மீண்டும் மீண்டும் புரட்சிக்கு ஆதரவாகவும் கட்சிக்கு உதவிடவும் முன்வந்தனர். இக்காரணத்தினால்தான் மென்ஷ்விக்குகள் அவர்களை கட்சியின் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ள விரும்பினர்.

ஆனால் லெனின் அவர்கள், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சியை நிறுவுவதில் வேறுபட்ட ஒரு இலக்கினை கொண்டிருந்தார். மென்ஷ்விக்குகளின் அதிதீவிர– புரட்சிவாதத்தையும் அராகஜகவாதத்தையும் எதிர்கொண்டு, மனித உடலைப் போன்றதொரு ஒற்றை குணாம்சம் கொண்ட பாட்டாளிவர்க்கத்தின் ஒரு புரட்சிகர கட்சியை உருவாக்கிட அவர் விரும்பினார்.

லெனின் தலைமையினான போல்ஷ்விக்குகள் கீழ்க்கண்டவைகளை உறுதியாக அறிவித்தனர்:

1. உழைக்கும் வர்க்கம் மற்றும் உழைக்கும் வர்க்கக் கட்சி ஆகிய இரண்டும் ஒன்றல்ல. உழைக்கும் வர்க்கத்தின் ஒரு கட்சி என்பது, மார்க்சிச சித்தாந்தத்தை உள்வாங்கிக்கொண்ட வர்க்க உணர்வு பெற்ற உழைக்கும் வர்க்கத்தின் முன்னணிப்படை (Detachment) பிரிவினராகும்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

## மனிதத் தன்மையற்ற முத்தலாஹ் முறை

# ஒடுக்கப்பட்ட முஸ்லீம் பெண்கள் இக்கொடுமையிலிருந்து எப்படி விடுபடப்போகிறார்கள்

முஸ்லீம் பெண்கள், குறிப்பாக மிகவும் பின் தங்கிய நிலையிலும், ஏழ்மை நிலையிலும் வாழ்ந்து வருகின்ற முஸ்லீம் பெண்கள் முத்தலாஹ் என்ற விவாகரத்தினால் குடும்பத்திலிருந்து விலக்கி வைக்கப்படும்போது அவர்கள் அனுபவிக்கின்ற துன்பம், சமூக நிராகரிப்பு இவைகள் எந்த அளவிற்கு மனதை உருக்குவதாக இருக்கின்றன என்பதை இந்திய சமுதாயத்தின் யதார்த்த நிலை பற்றி பரிட்சயம் பெற்ற எவரும் சுலபமாக அறிந்து கொள்ள முடியும். ஆண்களின் அப்பட்டமான குறுகிய சுய லாப முடிவுகளின் பொருட்டும், பெரும்பாலும் அற்பமான சாக்குப்போக்குகளைக் காரணம் காட்டியும் கணவனால் கைவிடப்படுகின்ற இப்பெண்கள், கையில் கைக் குழந்தையுடன் நிராதரவாக வீதியில் விடப்படுகிறார்கள். பெண்ணின வெறுப்புகொண்ட, இதயமற்ற, இந்து குருமார்கள், தலைவர்களின் ஈவிரக்கமற்ற தன்மை எவ்வாறு உடன்கட்டையேறும் அம்சங்களை பெண்கள் மீது திணித்ததோ, அது போன்றே ஈவிரக்க மற்ற சுரண்டல் முதலாளித்துவ அமைப்பின் இந்த ஆணாதிக்கவர்க்க சமுதாயத்தில் கொடுமை மற்றும் மனிதாபிமானமற்ற தன்மை முஸ்லீம் பெண்கள் மீதும் திணிக்கப்பட்டது.

மனிதாபிமானமற்ற இந்த முத்தலாஹ் முறையை (ஒருதலைபட்சமான உடனடி விவாகரத்து) அகற்றக்கோரும் நீண்டகாலக் கோரிக்கையானது, இஸ்லாமிய சமுதாய மக்களிடமிருந்து, குறிப்பாக பெண்களிடமிருந்து சமீப காலமாக எழுப்பப்பட்டு வருகின்றது. கடந்த ஏப்ரல் *2016* இறுதியில் உத்ரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்த சாய்ராபானு என்ற 35 வயதுப் பெண் தன் கணவன் தனக்கு கடிதம் மூலம் முத்தலாஹ் கொடுத்ததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தை அணுகியபோது அது பத்திரிகை களில் தலைப்புச் செய்தியாக இடம் பிடித்தது. மேலும் இந்தப் பெண், பலதாரமண முறையை எதிர்த்தும் மற்றும் நிக்கா ஹலாலா–வின்படி முத்தலாஹ் கொடுக்கப்பட்ட பெண் தனது கணவரிடம் மீண்டும் இணைந்து குடும்பம் நடத்த வேண்டுமெனில், அவள் வேறொரு கணவனை மணந்துகொண்டு அவனுடன் குடும்ப உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நடை முறையையும் எதிர்த்தார்.

இந்த முத்தலாஹ் முறையை தடைசெய்யக் கோரி 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் ஆண்கள் கோரிக்கை மனுவில் கையொப்ப மிட்டுருந்தார்கள் என டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகை கூறியது. பாரதிய முஸ்லீம் மகிளா அந்தோலன் அமைப்பினர் இந்த மனுவை சமர்ப்பித்தனர். இதனை முன்னின்று நடத்திய பாரதிய முஸ்லீம் அந்தோலன் அமைப்பினர் (BMMA) இது குரானில் சொல்லப்படாத நடைமுறை என்று அதனைக் குறிப்பிட்டதோடு, பெண்களுக்கான தேசிய கமிஷன் இதில் தலையிட வேண்டுமென்று கோரினர். இதற்கு முன்பும்கூட, 1986ல் ஷாபானு என்ற ஒரு 62 வயது மூதாட்டி, அவரது கணவன் முத்தலாஹ் கூறி விவாகரத்து செய்தபோது, நீதி வேண்டி உச்ச நீதிமன்றத்தை அணுகியபோதும் இதுபோன்ற கோரிக்கை எழுப்பப்பட்டது.

ஒடுக்கப்பட்ட முஸ்லீம் பெண்களிடமிருந்து இதற்கான கோரிக்கை எழும் நிலையில் இந்தக் கோரிக்கையானது எத்திசைவழியில் அமைய வேண்டுமென்பதை இங்கே குறிப்பிட வேண்டும். நாம் வாழும், தந்தை வழி ஆணாதிக்கமும் மதக் குருட்டுத்தனங்களும் நிறைந்த இச்சமூகத்தில் அவர்களின் கோரிக்கைகள் அவற்றிலிருந்து விடுபடும் நோக்கம் கொண்டதாகவும், ஒரு சரியான தீர்வை நோக்கியும் அமையவேண்டும் என்பதே சரியானதாகும். ஆனால் கெடுநோக்கம் கொண்ட பிற்போக்கு சக்திகள் அடிப்படைவாத வகுப்புவாத பிரச்சினைகளுக்குத் தூபமிட்டு மக்களின் கவனத்தை பிரதானப் பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்பி மதக் குருட்டுத்தனத்தாலும், மூடத்தனத்தாலும் மக்களின் ஆரோக்கியமான சிந்தனையையும் பகுத்தாயும் திறனையும் சிதைத்தழிக்கும் சூழ்ச்சித் திட்டத்தை கைவசம் வைத்து செயல்படுத்தி வருகிறார்கள்.

ஆகவே, மனிதநேயச் சிந்தனை கொண்டிருக்கின்ற, அதற்கு மதிப்பளிக்கின்ற மற்றும் ஒடுக்கப்படும், துன்புறுத்தப்படும் பெண்ணினத்தின் உணர்வுகளைப் புரிந்துகொண்ட, பாடுபடும் வெகுஜனங்களின் அனைத்துப்பிரிவினரையும் சார்ந்த ஜனநாயக எண்ணம் கொண்டவர்களுக்கு நாம் விடுக்கும் உருக்கமான வேண்டுகோள் என்னவெனில், அவர்கள் அனைத்து விதமான பிரிவினைவாத, குறுகிய எண்ணப் போக்கிலிருந்து விடுபட்டு, காரண காரியம் மற்றும் நியாயத்தின் அடிப்படையில் இக்கொடுமையான முத்தலாஹ் முறையை நீக்கிடும் கோரிக்கையை ஆராய வேண்டும் என்பதாகும்.

### பிரச்சினையை திசைதிருப்ப மேற்கொள்ளப்படும் மத அடிப்படைவாதிகள் – வகுப்புவாதிகளின் சூழ்ச்சித் திட்டம்

முத்தலாஹ் முறையின் பிடியிலிருந்து முஸ்லீம் பெண்களை விடுவிக்க வேண்டியது தற்போதைய அவசிய அவரசமான தேவையாய் இருக்க, இது அவசியமில்லை என்று எவர் எதிர்க்க முடியும்? உண்மையில் மனித குணங்களின் குறைந்தபட்ச சாராம்சங்களைக் கொண்டிருக்கும் எவரும் இதனை எதிர்க்க மாட்டார்கள். ஆனால் கவலையளிக்கும் விஷயம் என்னவெனில், இத்தகைய கொடுமையான நடைமுறைக்கு எதிராக அவர்களிடம் தேவையான விழிப்புணர்வு வளர்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஒடுக்கப்பட்ட இஸ்லாமியப் பெண்கள் அனைத்து உரிமையுடன் மீண்டும் துணிச்சலுடன் குரலெழுப்பத் துவங்கியவுடன், எது நல்லது, எது கெட்டது, எது செய்யத்தகாதது, எது செய்யத் தக்கது என்பதை முடிவு செய்யும் முழு அதிகாரம் படைத்தவர்கள் தாங்கள்தான் என்று தூளுரைத்துக் கொள்கின்ற முஸ்லீம் அடிப்படைவாத குழுக்களும் அதன் மத குருமார்களும் தங்களின் எதிர்ப்புக் குரலை உயர்த்துகிறார்கள்.

அகில இந்திய முஸ்லீம் பெர்சனல் லா போர்டானது, (AIMPLB) “முஸ்லீம்களுக்கான தனிச் சட்டம் புனிதச் சட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதனை மாற்ற முடியாது” என்று உரத்துப் பேசுகிறது. ஆனால், பெண்களுக்கெதிரான இந்த முத்தலாஹ் நடைமுறையை ஒழிக்க வேண்டுமென்ற கோரிக்கை மறுபுறத்தில் எழுந்தவண்ணம் இருக்கிறது. இந்துத் துவத்தின் புனிதத்தைக் காப்பாற்றுகிறோம் என்ற பெயரில் செயல்பட்டுவரும் பிரதான இந்துத்துவ வகுப்புவாதிகளும் அடிப்படைவாதிகளுமான ஆர்எஸ்எஸ், பாஜக, சங்கப்பரிவாரங்கள் கௌரவக் கொலை, பலதார மணம், இருதாரமணம் மற்றும் நீண்ட காலங்களுக்கு முன்பே தடைசெய்யப்பட்ட சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கம் மற்றும் எல்லாவகையான மதப் பிற்போக்குத் தனங்கள், குருட்டுத் தனங்கள், மூடத்தனங்கள், வெறித்தனங்கள் மற்றும் அப்பட்டமான பெண்கள் விரோத மனோ நிலை என ஆயிரக்கணக்கில் பெண்களுக்கெதிரான நடைமுறைகளையும், பழக்க வழக்கங்களையும் ஊக்கு வித்து பரவலாக்கி வருகிறார்கள். ஆனால் இப்படிப் பட்டவர்கள் முஸ்லீம்களுக்கெதிராக திட்டமிடப் பட்ட வெறுப்புப் பிரச்சாரத்தினை தீவிரப்படுத்த இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நிராதரவற்ற, நிர்க்கதியான நிலையில் இருக்கும் முஸ்லீம் பெண்கள் நிலைமைக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்ற இந்துத்துவவாதிகளான இவர்கள்தான் மனு நீதி குறிப்பிடுகின்ற, பெண் களுக்குச் சுதந்திரம் வழங்கப்படக் கூடாது என்பதை புனிதச் சட்டமாக மதித்துக் கொண்டாடுகிறார்கள். இவர்கள்தான் ஜனநாயகப்பூர்வமாக சிந்திக்கின்ற மக்களை ஏமாற்றுவதற்காக நாட்டில் பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கூறுகின்றனர். ஆனால், இவர்களின் நோக்கம் சமுதாயத்தை ஜனநாயகப்படுத்துவது அல்ல. இவர்களின் நோக்கம் உண்மையில், தேர்தல் ஆதாயம் அடைய வேண்டும் என்பதற்காக, இஸ்லாமியர் மத்தியிலிருக்கும் குறைகளைச் சுட்டிக்காட்டி, அதன் மூலம் வகுப்புவாதப் பிளவைத் தூண்டிவிட்டு, மக்களை துருவமயப்படுத்துவதாகும். அடிப்படை வாதத்தையும், இந்துத்துவ வகுப்புவாதத்தையும், வெறிவாதத்தையும் பின்பற்றுபவர்களாகிய இவர்கள், முன்னுக்குப்பின் முரணாக பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று வாதிப்பது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பான செயலாகும்.

இஸ்லாமிய சமூகத்திற்கு வெளியிலிருந்து கொண்டு குய்யோ! முறையோ! என்று கத்துவதன் மூலமும் அவசியமின்றி இந்நேரத்தில் பொது சிவில் சட்டப் பிரச்சினையை சம்பந்தமில்லாமல் இழுப்பதன் மூலமும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதி இஸ்லாமிய ஆண்கள் தரப்பிலிருந்தும் மற்றும் பாதிப்பிற்கு ஆளான பெண்களின் தரப்பிலிருந்தும் கிளம்புகின்ற, தாமதமான, ஆனால் நியாயமான அப்போராட்டங்களின் தீவிரத்தைக் குறைப்பதன் மூலமும் இஸ்லாம் மார்க்கம் ஆபத்தில் உள்ளது. எந்த ஒரு மதத்தையும் பின்பற்றுவதற்கு அமைப்புச் சட்டம் வழங்கியிருக்கின்ற உரிமையை பறிக்கிறார்கள் என்ற முழக்கங்களை மிகத் தந்திரமாக எழுப்பி, முஸ்லீம் மக்களை அணிதிரட்டும் இஸ்லாமிய மத குருமார்களுக்கு நல்ல சந்தர்ப்பத்தை இவர்கள் வழங்குகிறார்கள்.

இவ்வாறாக, முத்தலாஹ் முறையை ஒழிப் பதற்கான கோரிக்கைகளும் தந்தைவழி ஆணாதிக்கச் முதலாளித்துவச் சமூகத்தால் ஒடுக்கப்படும் பெண்களின் துன்ப துயரங்களும் பின்னுக்குத் தள்ளப்பட்டு அதற்குப் பதிலாக கெடு நோக்கம் கொண்ட இரண்டு தரப்பினர் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொண்டு அடிமனதில் தேங்கிக் கிடக்கும் பெண்களுக்கெதிரான மனநிலை என்ற குட்டையைக் குழப்பி ஆதாயம் தேடுகிறார்கள். இவ்வாறுதான் ஆர்எஸ்எஸ், பாஜக, சங்கப்பரி வாரங்கள் இந்த ஒட்டுமொத்தப் பிரச்சினையையும் குழப்பித், திரித்து இஸ்லாமிய சமூகத்தில் இருக்கின்ற அடிப்படைவாதிகள் இந்த பிரச்சினையில் ஆதாயம் தேடிக்கொள்ள சந்தர்ப்பம் வழங்குகிறார்கள்.

### இது குறித்த சில ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உண்மைகளையும் வரலாற்றையும் மீண்டும் நினைவுபடுத்துவோம்

முதலில், எந்த ஒரு பிரச்சினையையும் அல்லது சமூகக் கலாச்சாரம் குறித்த விஷயங்களையும் நிகழ்காலச் சமூகப், பொருளாதார, அரசியல் பின்னணியில் அவை வகிக்கும் இடம் மற்றும் காலப் பொருத்தத்துடன் தொடர்புபடுத்தி பரிசீலிக்க வேண்டும். எது சரி எது தவறு என்பதை கண்மூடித் தனமாகவோ ஒருதலைப்பட்சமான பார்வையுடனோ முடிவு செய்யாமல் அனைத்துவிதமான குறுகிய கண்ணோட்டங்களிலிருந்தும் காலாவதியாகிப்போன சிந்தனைகளிலிருந்தும் விடுபட்டு நியாயத்தின் அடிப்படையில் பரந்துபட்ட இன்னல்படும் வெகு ஜனங்களின் நன்மை மற்றும் அவர்களுக்கான பலன் என்ன? என்ற கண்ணோட்டத்தின்படி முடிவு செய்தல் வேண்டும் என்பதைச் சொல்லியாக வேண்டும்.

பல்வேறு மாறுதல் கட்டங்கள் வாயிலாக, நாகரிகத்தின் முன்னேறிய வளர்ச்சி மற்றும் சமுதாய முன்னேற்றம் அடையப்பெற்றதின் சரித்திரத்தை நன்கறிந்தவர்கள், அனைத்து சட்டங்களும் சம்பிர தாயங்களும், நடைமுறைகளும் சடங்குகளும் மற்றும் பழக்க வழக்கங்கள் யாவும் சமுதாயத்தேவைகளை மனதில் கொண்டு தோன்றியிருக்க வேண்டும் என்பதையும் அல்லது தங்களது குறுகியவாத நலன் களுக்காக அடக்குமுறை ஆட்சியாளர்களால் திணிக்கப்பட்டவை என்பதையும், துல்லியமாகக் கூறினால், வர்க்கப்பிளவுபட்ட சமுதாயத்தில் அவர்களின் வர்க்க நலன்களுக்காக திணிக்கப் பட்டவை என்பதையும் அறிவர். வேறு வகையில் கூறுவதானால் இம்மாதிரியான சட்ட திட்டங்களும் நடைமுறைகளும் பழக்கவழக்கங்களும் மனிதனால் உருவாக்கப்பட்டவைகளும் உருவாக்கப்படுபவை களுமாகும். இவை அனைத்திற்கும் பின்னணியில் ஒரு திட்டவட்டமான சமூகக் கலாச்சார வேர்கள் இருக்கின்றன. சமூகம் மாற்றமடைந்து கொண்டே யிருப்பதால், அம்மாற்றத்திற்கேற்பவும் மற்றும் மாற்றத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டும் அதன் சட்டதிட்டங்களும் சமூக நடைமுறைகளும் பழக்கவழக்கங்களும் மாற்றப்படுகின்றன, சீர்படுத்தப் படுகின்றன அல்லது முழுவதுமாக மாற்றியமைக்கப் படுகின்றன. ஆக நிரந்தரமாக என்றென்றும் அழியாதது, அழிக்கமுடியாதது என்பது அறிவியலுக்குப் புறம்பானதும், யதார்த்தத்திற்கு மாறானதும் மற்றும் உண்மைக்குப் புறம்பானதும் ஆகும். சமூகத்தின் தேவையும் நோக்கங்களும் முன்னேற்றத்தின் அடையாளங்களாக, அடைய வேண்டிய மாற்றங்களைக் குறித்து ஆருடங்களை

தொடர்ச்சி 6ம் பக்கம்

## மனிதத் தன்மையற்ற முத்தலாஹ் முறை

# அடிப்படைவாத சக்திகள் முத்தலாஹ் முறையை அகற்ற எதிர்க்கின்றனர்

5ம் பக்கத் தொடர்ச்சி

முன்னறிவித்துச் செல்ல, ஆளும் வர்க்கமோ அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டுவிடுவோமென்ற மரண பீதியில் தங்களின் கேடான ஆட்சிமுறையின் மற்றும் தங்களின் வர்க்கத்தின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் சில சமூகப் பழக்கவழக்கங்களும், சட்ட திட்டங்களும் அப்படியேதான் இருக்கும் என்றும் அவை மாற்ற முடியாதவையென்றும் தந்திரமாகப் பிரச்சாரம் செய்கிறது. ஆண்டான் அடிமை சமுதாயத்திலும், நிலப்பிரபுத்துவ பண்ணையடிமை ஆட்சிமுறையிலும் இவைகள் எவ்வாறு நடந்து வந்தனவோ அதைப் போலவே இன்றைய சீரழிந்த முதலாளித்துவ ஆட்சிமுறையிலும் இவை நடந்து வருகின்றன.

ஒரு காலத்தில் அமெரிக்காவில் அடிமைகளைச் சொந்தமாக வைத்திருந்த எஜமான்கள் அனைவரும் பெரும்பாலும் கிருஸ்துவ மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்து வந்தனர். அவர்கள் கடவுளின் கட்டளைப்படிதான் அடிமைகளை விலைக்கு வாங்கி பயன்படுத்திவருவதாக பெருமையடித்துக் கொண்டார்கள். ரோமானியச் சக்ரவர்த்திகள் தாங்கள் கடவுளின் வாரிசுகள் என்று சொல்லிக் கொண்டார்கள் அவ்வாறு சொல்லிக்கொண்டு அடிமைகளை கொடுமைப்படுத்தியதோடு அவர்களை அடிமைத்தளையில் பிணைத்து மனிதனிலும் இழிவாக நடத்தினார்கள். இயேசு கிருஸ்துவின் போதனைகள் ரோமானிய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் மற்றும் கருத்துக்களை எதிர்த்து வெளிப்படையாக சவால் விடுத்தபோது ரோமானிய அதிகாரவர்க்கம் இயேசுவின் சிந்தனைகள், தங்களின் எதேச்சதிகார ஆட்சிக்கு ஒரு அச்சுறுத்தல் என்பதைக் கண்டுகொண்டது. ரோமானிய சாம்ராஜ்யத்தின் புனிதச் சட்ட திட்டங்களை மீறியதாகக் குற்றம் சுமத்தி அவரை சிலுவையில் அறைந்தது. இதைப்போலவே நிலப்பிரபுத்துவ கண்மூடித்தனங்கள் மற்றும் எதேச்சதிகார ஆட்சிக்கு எதிராக, முதலாளித்துவம் உதயமான பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக் காலக்கட்டத்தில் மதச்சார்பின்மைவாதம் என்ற தத்துவக் கண்ணோட்டத்தை அரசியல், சமூக உறவுகள் மற்றும் நடைமுறைகளில் கொண்டுவரவும் மேலும் இவை அனைத்தும் மதத்திற்கு அப்பாற்பட்டும், எந்த ஒரு மத நம்பிக்கையின் குறுக்கீட்டிலிருந்து விடுபட்டும் இருக்கவும் மறுமலர்ச்சி சிந்தனைகளை முன்மொழிந்தவர்கள் அறைகூவல் விடுத்தனர். இதன் காரணமாக, இதுவரையில் தங்களின் வர்க்க நலன்களுக்கு சேவை செய்துவந்த தங்களைக் கடவுளின் நேரடியான பிரதிநிதிகள் என்று தங்களைச் சொல்லிக் கொண்ட எதேச்சதிகார ஆட்சியாளர்கள், நிலப்பிரபுக்கள் மற்றும் மடாதிபதிகள் தங்களின் ஆட்சிக்கு அச்சுறுத்தல் வந்துவிட்டதை உணர்ந்து கொண்டனர்.

மறுமலர்ச்சி சிந்தனைகள் என்பது நியாயத்தையும் முன்னேற்றத்தின் போக்கையும் தீர்மானிப்பதற்கான அடிப்படையாக குருட்டுத்தனமான மத நம்பிக்கைகளும் வெறித்தனங்களும் இருக்கக்கூடாதென்பதையும் அது காரணகாரியத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதையும் உயர்த்திப்பிடித்தது. நிலப்பிரபுத்துவ முடியாட்சியாளர்கள் தாங்கள் அதிகாரத்திலிருந்து தூக்கியெறியப்படுவதை தடுக்கும் இறுதி முயற்சியாக, “புனிதத்தன்மை தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டது” என வெளிப்படையாக ஓலமிட்டனர். மேற்கு ஐரோப்பிய வரலாற்றைப் பார்த்தவரையில் டொனேசன் ஆஃப் கான்ஸ்டன்டைன் என்ற ஒரு பொய்யான ஆவணத்தைப் பயன்படுத்தி மன்னர்களைப் பதவியைவிட்டு இறக்கவும், புதிய மன்னர்களை நியமிக்கவும் தாம் அதிகாரம் பெற்றிருந்ததோடு தனக்குக் கட்டுப்படாதவர்களைத் தண்டித்து ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து வெளியேற்றும் அதிகாரத்தையும் தாம் கொண்டிருப்பதாக போப் அறிவித்துக் கொண்டார்.

பூர்ஷ்வா ஜனநாயகத்தை தோற்றுவித்த முதன்மையானவர்களில் ஒருவரான தாமஸ் ஜெபர்சன், ஸ்காட்லாந்தைச் சேர்ந்த 18ஆம் நூற்றாண்டின் பிரபல வரலாற்றாசிரியரும் தத்துவவாதியுமான டேவிட் ஹியூம்–ஐ அடிக்கடி மேற்கோள் காட்டிப் பேசிடுவார். ஒருமுறை டேவிட் ஹியூம் கூறுகையில், மத குருமார்களுக்கும் அரசர்களுக்கும் மக்கள் தரும் மூடத்தனமான மரியாதையினால் தங்களின் நிலைத்தன்மையை பெற்றிருக்கும் முடியாட்சியாளர்கள் சுதந்திரத்தை கிட்டத்தட்ட சுருக்கி விடுகின்றனர். இதன் விளைவாக, மனிதர்கள் முடியாட்சியாளர்களின் தார்மீக அரசியல் அதிகாரத்திற்கு மனமுவந்து கீழ்ப்படிந்து விடுகின்றனர். இவ்வாறு அவர்கள் தார்மீகம் மற்றும் அரசியலில் சுயமாக, காரண காரியம் அறிவதை விட்டுவிட்டு, திருச்சபை மற்றும் அரசைச் சார்ந்தே இருந்தனர் என்று கூறினார்.

ஆனால் காலாவதியாகிப்போன எதேச்சதிகாரம் கொண்ட நிலப்பிரபுத்துவக் கொடுங்கோல் ஆட்சியாளனைக் காப்பாற்ற மடாலயங்கள் எடுத்த இவ்வாறான அனைத்துத் தந்திரமான முற்சிகளும் வீண் என்பது பின்பு நிரூபணமாகிவிட்டது. புதிய ஜனநாயக சமூக அமைப்பு பழையதன் இடத்தில் வந்து அமர்ந்தது. அவ்வாறு வந்தமர்ந்தபின்பு பெரும்பாலும் மதத்தின் அடிப்படையில் இதுவரையில் பின்பற்றப்பட்டுவந்த சமூகப் பழக்கவழக்கங்களும் சம்பிரதாயங்களும், நடைமுறைகளும் எவையெல்லாம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற நெறிகளுக்குப் பொருந்தாதனவாகவும், பூர்ஷ்வா ஜனநாயகத்தின் லட்சியத்திற்குக் குறுக்கீடாகவும் இருந்தனவோ அவையனைத்தும் அழித்தொழிக்கப்பட்டன.

மேற்கத்திய நாடுகளின் மடாலயங்களில் நடந்ததைப் போலவே 19ஆம் நூற்றாண்டில் இந்திய சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டபோது அன்றைய காலத்தின் நிலப்பிரபுத்துவ சமூகத்தின் இந்துமத குருமார்களும், பண்ணையார்களும் இந்த அனைத்துச் சீர்திருத்தங்களையும் கடுமையாக எதிர்த்தனர். சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழிக்க ராம்மோகன்ராய் அவர்கள் பல்வேறு முயற்சிகளைச் செய்தபோது அதனை அவர்கள் இந்துமதத்திற்கு இழைக்கும் அவமரியாதை என்றும் கடவுள் விருப்பத்திற்கு எதிரானது என்றும் சொன்னார்கள். இதைப்போலவே இந்திய மறுமலர்ச்சியின் மற்றுமொரு பிதாமகரான வித்யாசாகர் அவர்கள் பெண்களின் மறுமணத்திற்காவும் பெண்கல்விக்காகவும் போராட்ட இயக்கங்களை நடத்தியபோது இது போன்ற எதிர்ப்புகளையே சந்தித்தார்.

ராம்மோகன் ராய், வித்யாசாகர் ஆகிய இருவரும் எந்த ஒரு இந்து சாஸ்திரமோ அல்லது புனிதச் சட்டங்களிலோ இது போன்ற ஒரு குருட்டுத்தனமான நடைமுறைக்கு ஒப்புதல் வழங்கப் பட்டிருக்கவில்லை என்பதை தீர்க்கமாக நிரூபித்தனர். இவ்வாறாக இவையனைத்தும் சாஸ்திரங்கள் மற்றும் போதனைகளுக்கு வெளியிலிருந்து திணிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், இவை புனிதமான கட்டளைகள் அல்ல என்பதையும் தெளிவுபடுத்தினார். இந்திய மறுமலர்ச்சியின் முன்னோடிகளான ராம்மோகன், வித்யாசாகர் ஆகிய இருவரும் சமூகத்தை ஜனநாயகப் படுத்தவேண்டியதன் தேவை மற்றும் அவசியம் கருதி இந்த சீர்திருத்தங்களை கொண்டுவர முயற்சித்தனர். இதில், தந்தைவழி ஆணாதிக்கத்திலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும் கொடுமையிலிருந்தும் பெண்களை விடுவிப்பது மற்றும் அவர்களின் விடுதலையையும் சமத்துவத்தையும் அங்கீகரிக்கும் கடமையும் அடங்கும்.

### பழக்கவழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் மாற்றமுடியாது எனும் பொய்மை

ஆக, அனைத்து சட்ட திட்டங்களும் பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும், ஒன்று மக்களின் நலன்களுக்காகவோ அல்லது ஆட்சியாளர்களின் நலன்களுக்காகவோ மனிதனால் ஏற்படுத்தப்பட்டது என்பதைப் பார்க்கலாம். மேலும் மாறிக்கொண்டிருக்கும் இவ்வுலகில் நிலையானது மற்றும் மாற்ற முடியாதது என்று எதுவும் இல்லை என்பதை அறிவியல் மற்றும் சமூகவியலின் எந்த ஆய்வும் வெளிப்படுத்தும். அறிவியல் ஐயத்திற்கிடமின்றி நிரூபித்தபடி, இயக்கம் (Motion) என்பதே பருப்பொருளின் (Matter) இருத்தல் முறையாக (Mode of existence) இருப்பதினால், இப்பொருளாய உலகில் (Material world) மாற்றம் (Change) என்பது ஒரு இயற்கை நிகழ்வாகும். முன்னேற்றம் என்பது, எப்போதுமே காலாவதியாகிப்போன பழையதிலிருந்து புதியதொரு மேம்பட்ட ஒன்றுக்கு மாற்றத்தின் மூலம் ஏற்படுவதாகும். எந்த பழைய சட்டமும், சம்பிரதாயமும், நடைமுறையும் அதன் பயன்பாட்டை இழந்து காலாவதியாகிவிடும்பொழுது அவைகள் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கும் போது, அவை நிராகரிக்கப்படவும் அவ்விடத்தில் புதியதொன்று கொண்டுவரப்படவும் வேண்டும். ஏதேனும் ஒரு சாக்குப்போக்கின் பேரில் எந்த ஒரு சட்டம், பழக்க வழக்கங்கள், நடைமுறை, சடங்கு யாவும் என்றென்றும் நிரந்தரமானவை மாற்றமுடியாதவை என்று கூறுவது மனித நாகரீகம், முன்னேற்றம் மாற்றம் பரிணாமவளர்ச்சி பற்றிய விஞ்ஞானப்பூர்வ விதிகள் குறிப்பிடும் உண்மைகளை முற்றிலுமாகப் புறம்தள்ளுவதற்கு ஒப்பாகும். இது உயிருடன் இருந்தபொழுது ஒரு மனிதன் மிகுந்த அழகுடன் இருந்தான் என்பதற்காக அவன் இறந்தபிறகு அழுகி நாற்றமெடுக்கும் அவனது வெற்றுடலைப் புதைக்க மறுப்பதற்கு ஒப்பானதாகும்.

இப்பின்னணியில், புனிதமானது என்றோ, அல்லது வேறு காரணத்தினாலோ, ஏதாவது ஒரு பழக்க வழக்கம் மாற்றிட முடியாதது என வாதிடப்பட்டால், அதனை தர்க்கம் மற்றும் பகுத்தறிவின்படி ஏற்றுக் கொள்ள முடியுமா? இதனை சரியாக சிந்திக்கும், மனசாட்சியுள்ள எந்த மனிதனாலும் ஏற்றுக்கொள்ள முடியுமா?

இவ்வாறான கண்ணோட்டத்தில் விஷயங்களை அணுகுகிறபோது முத்தலாஹ், பலதாரமணம், இருதாரமணம், குழந்தைத் திருமணம், பெண்சிசுக் கருக்கலைப்பு அல்லது பெண் சிசுக்கொலை, குழந்தைப்பேறு இல்லாவிடில் மனைவியைக் கைவிடுதல், குழந்தை பாக்கியமற்ற பெண்ணை சமுதாயத்திலிருந்து விலக்கிவைத்தல் கணவனின் இரண்டாவது திருமணத்திற்கு கைவிடப்பட்ட முதல் மனைவி சம்மதம் வழங்கிட நிர்ப்பந்தித்தல், கணவனின் ஆயுள் நீடித்திருக்கவும் அவனின் நலனுக்காகவும் கடவுளின் கோபத்தைத் தணிக்கவும் பெண்கள் உண்ணாவிரதம் இருக்கும்படி கேட்டுக் கொள்வது, விதவைகளை எந்த சுப நிகழ்ச்சிகளிலும் ஒதுக்கிவைப்பது, மாதவிலக்குக் காலங்களில் பெண்கள் சமையலறைக்குள் செல்ல அனுமதி மறுப்பது, புனிதம் கெட்டுவிடும் என பெண்கள் ஆலயத்திற்குள் சென்று வழிபாடு நடத்த அனுமதி மறுப்பது. ஆலயத்திற்குள் பெண்கள் செல்வதைக் கடவுள் அவமதிப்பாகக் கருதுவது, ஜைன மத வழக்கத்தில் இருப்பதைப்போன்று உண்ணாவிரதம் இருந்து உயிர்துறப்பது என்று இன்னும் இவை போன்ற பல எண்ணற்ற நடைமுறைகளும் பழக்க வழக்கங்களும், சடங்குகளும் மதத்தின் பெயராலும் முன்னோர்களின் வழிமுறை, நடைமுறை மற்றும் கலாச்சாரம் என்ற பெயராலும் நியாயப்படுத்தப்படுவதை நாம் காணமுடியும்.

ஆக முஸ்லீம் சமூகத்தினரில் ஒரு பகுதி மக்கள், மிகக் குறிப்பாக பெண்கள் இந்த முத்தலாஹ்கை தந்தைவழி ஆணாதிக்கச் சமூகத்தின் மேலாதிக்கம் என்றும் பெண்களின் சுதந்திரம், கண்ணியம் ஆகியவற்றைக் குழிதோண்டிப் புதைப்பது என்றும் இதனை உடனடியாகக் தடைசெய்ய வேண்டும் என்றும் கோருகிறபோது, இந்தக் கோரிக்கையில் இருக்கின்ற நியாயத்தையும் அதன் நல் அம்சங்களைத் தீர்மானிக்க ஒருவர் பொறுமையுடனும், யதார்த்தத்துடனும் அணுகுவதுடன் அனைத்துவித ஒருதலைப்பட்சமான சிந்தனைகள், கண்மூடித்தனம், பிடிவாதம், முன்னபிப்பிராயங்கள் இவைகளிலிருந்து விடுபட்டிருக்கவேண்டும். அவ்வாறு தீர்மானித்த பின்பு முஸ்லீம் மக்களால் எழுப்பப்படும் இந்தக் கோரிக்கைகள் நியாயமானதென்று படுமானால் இந்த கோரிக்கைகளை எதிர்ப்பதற்காகச் செய்யப்படும் அனைத்து இடர்பாடுகளையும் மீறி, இக்கோரிக்கைகளைத் தவறாகத் திருத்திக் கூறுபவர்களின் தடைகளையும் மீறி, மிக உறுதியாக இக்கோரிக்கைகள் ஆதரிக்கப்படவேண்டும்.

### சமூகம் ஜனநாயகப்படுத்தப்பட்ட வரலாறு

மேலும் நாம் இவ்விஷயம் குறித்த விவரங்களை விரிவாகப்பேசுவதற்கு முன்பாக, சமூகத்தை ஜனநாயகப்படுத்த வேண்டியதன் வரலாறு மற்றும் அவசியம் குறித்துச் சற்றே சுருக்கமாக நினைவு படுத்துவோம். நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் ஆளும் மதகுருமார்களால் வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்களையும் பழக்கவழக்கங்களையும், மத நம்பிக்கைகளையும் கண்மூடித்தனமாக மக்கள் பின்பற்றும்படியாக நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். மனிதன் என்பவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியின் பிரதிபலிப்பு மட்டுமே, ஆகவே அவன் இறைவன் சித்தத்தை மீறிச் செல்லக்கூடாது என்று மதகுருமார்கள் பிரச்சாரம் செய்தார்கள். ஆகவே அவர்கள், மதகுருக்கள், முடியாட்சியாளர்களின் விருப்பத்திற்கு எதிராகச் செயல்படக்கூடாதென்றும் சொல்லிவைத்தார்கள்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

## மனிதத் தன்மையற்ற முத்தலாஹ் முறை

# சமூகம் ஜனநாயகப்படுத்தப்பட்டால் மட்டுமே நிலப்பிரபுத்துவ கேடுகளனைத்தையும் அகற்றிட முடியும்

**6**ம் பக்கத் தொடர்ச்சி

இந்த பழைமையான சிந்தனைகளுக்கு அடிமையாகிப்போன மனித மனங்களை நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பிலிருந்து விடுவிப்பதற்கான குரலாகத்தான் முதலாளித்துவத்தின் உதயகாலத்தில் மதச்சார்பின்மையின் குரல் ஒலித்தது. ஒரு உண்மையான, மதச்சார்பற்ற, ஜனநாயகக் கட்டமைப்பில் அரசின் அல்லது பொது விஷயங்களில் மதத்திற்கு எந்த இடமும் கிடையாது. ஏனெனில், தவிர்க்கவியலாத வரலாற்று விதியின்படி மதம் என்பது ஏற்கனவே அதன் பயன்பாட்டை இழந்து உபயோகமற்றதாகி விட்டது, அனைத்து அம்சங்களிலிலும் அது பிற்போக்காகிவிட்டது.

மதசார்பற்ற ஜனநாயக கோட்பாட்டின்படி, அனைத்து சட்டமியற்றல்களும் செயல்பாடுகளும் மதத்திலிருந்து விடுபட்டதாகப் பார்க்கப்பட வேண்டும். மதச்சார்பின்மை கோட்பாடுகள் என்பது, மதம் ஒருவரின் தனிப்பட்ட விவகாரம் என்று கூறுகிறது. அது சமூகக் கலாச்சார அரசியல் களங்களில் அதன் குறுக்கீட்டிற்கு இடமில்லை என்கிறது. அரசிலிருந்து மடாலயங்களைப் பிரிப்பதற்கு இடையறாத தொடர்ச்சியான நீண்ட வரலாறுகொண்ட போராட்டம் ஐரோப்பாவில் நடத்தப்பட்டது. வேறுவகையில் கூறுவதானால், மடாலயங்களின் பிடிகளிலிருந்து அரசை விடுவித்து, அதன் மூலம் மதக்கட்டுத்தளையிலிருந்து சமூகப் பழக்க வழக்கங்களையும் செயல்பாடுகளையும் பிரித்து வைத்து, தனிநபர் விடுதலை மற்றும் குறிப்பாக பெண்ணின விடுதலைக்கு மிகவும் எதிராக இருக்கும் மதக்கட்டளைகளையும் சடங்குகளையும் தடைசெய்வதற்காக நடத்தப்பட்டது.

மார்ட்டின் லூதர் போன்ற சீர்திருத்தவாதியை முன்னிருத்தி, கிருஸ்தவ சமுதாயத்தினுள்ளிருந்தே மதச்சீர்திருத்த இயக்க வடிவத்தில், இந்தக் கோரிக்கையானது எழுந்தது. இதன் விளைவாக, விஞ்ஞான முன்னேற்றத்தின் அடிப்படையில் வாழ்க்கையில் ஜனநாயகக் கோட்பாடுகளைக் கொண்டுவர காலாவதியாகிப்போன பழைமைவாத கருத்துக்கள் உடைக்கப்பட்டன. அதனால், நிலப்பிரபுத்துவத்திலிருந்து ஜனநாயகத்திற்கு மாறிச்செல்வது எளிதானது.

இதைப்போலவே **19**ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்திய மறுமலர்ச்சி இயக்கம் வளர்ந்தெழுந்தபோது, இதுவரையில் இந்துமத குருமார்களும் ஆட்சித் தலைவர்களும் மதத்தின் பெயரால் பின்பற்றிவந்த காலாவதியாகிப்போன நடைமுறைகளையும் சடங்குகளையும் களையெடுப்பதற்கான கோரிக்கை எழுந்தது. இத்தகைய கோரிக்கைகளுக்கான எண்ணங்கள் மதச் சீர்திருத்த இயக்கத்தில் எதிரொலித்தன. அவை இந்து சமூகத்தினை ஆட்டம் காண வைத்தது. சமூகம் ஜனநாயகப்படுத்துபட்டதன் வரலாறு இதுதான். இதற்கு முன்நிபந்தனையாக, அனைத்துவிதமான, இயற்கைக்கு அப்பாற்பட்ட அனைத்து நம்பிக்கைகளுக்கும் எதிராக, மனிதனே உயர்ந்தவன் என்பதை அங்கீகாரம் செய்வதற்கான சமரசமற்ற போராட்டம் அமைந்திட வேண்டும்.

இவைதான் அனைத்துவிதமான, இயற்கைக்கு அப்பாற்பட்ட, அனைத்துவிதமான நம்பிக்கைகளுக்கும் எதிராக மனிதனே உயர்ந்தவன் என்பதை அங்கீகாரம் செய்வதற்கான சமரசமற்ற போராட்டமாகும். இதனையே நம் சமூகம் வேண்டிநிற்கிறது. இவைதான் சமூகம் ஜனநாயகமயப்படுத்தப்பட்டதைப் பற்றிய வரலாறாகும்.

இஸ்லாமிய வரலாறு படிக்கும் விருப்பார்வம் கொண்ட எந்தவொரு மாணவரும் அல்லது புலமைபெற்ற அறிஞரும் அரேபிய நாடுகளின் வரலாற்றை படித்தறிகிறபோது ஒரு வேறுபட்ட சித்திரத்தைக் காணக்கூடும். துரதிருஷ்டவசமாக இந்த சமூக ஜனநாயகப்படுத்தல் பெரும்பாலான அரேபிய நாடுகளில் நடந்ததற்கான அடையாளங்கள் இல்லை. மறுமலர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான இயக்கங்கள் வளர்ந்தெழவில்லை. ஏனெனில், இவற்றிற்கெல்லாம் ஒரு திட்டவட்டமான சமூக வரலாற்றுக் காரணங்கள் இருக்கின்றன. ஆக, காலாவதியாகிப்போன பழைய மத நம்பிக்கையின் அடிப்படையிலான பழக்கவழக்கங்களையும் நடைமுறைகளையும் ஒழிப்பதற்கான கடமைகளை சமூகத்தின் அன்றைய காலத்தின் தேவைக்கேற்ப முன்னெடுக்க முஸ்லீம் சமூக மக்களிடமிருந்து வளர்ந்து எழுந்திருக்கவேண்டிய முன்னேற்றத்திற்கான போராட்டங்கள் வளர்ந்தெழாமல் அக்கடமைகள் நிறைவேற்றப்படாமல் போயின.

ஆகவே பல அம்சங்களில் பிற்போக்குத்தனங்களும் கண்மூடித்தனமான வழக்கங்களும் அப்படியே தொடர்ந்து நிலைபெற்று, துயரப்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லீம் வெகுஜனங்களின் முன்னேற்றமும் அறிவொளியும் அடுத்தகட்டம் நகர்வதைத் தடுத்துவந்தன. சொல்வதானல், வரலாறு பரிகசிக்கப்பட்டு, நடந்திருக்கக்கூடாத ஒன்று நடந்தேறியது.

வரலாற்றில் ஏற்பட்ட இந்த திட்டமிடப்படாத திருப்பத்தின் காரணமாக, ஒடுக்கப்பட்ட முஸ்லீம் மக்களை மென்மேலும் மதக் கண்மூடித்தனங்களுக்குள்ளும், மூட நம்பிக்கைகளுக்குள்ளும், காரணகாரிய அறிவிலிருந்து விலகிய சிந்தனைக்குள்ளும் பகுத்தறிவற்ற நிலையிலும் வைத்திருப்பதில் முஸ்லீம் அடிப்படைவாதிகள் அதிகம் வெற்றியடையமுடிந்தது. ஆகவேதான் மனிதகுலத்தின் இன்னல்படும் பெரும்பான்மை மக்களிடம் உண்மை சென்றடையாமல் எவ்வாறு விலகிநின்றதோ அதைப்போலவே முதலாளித்துவ ஆட்சியின் கீழும் மக்கள் படும் துன்ப துயரங்களையே முஸ்லீம் மக்களும் அனுபவித்து வருகிறார்கள். இந்த எதார்த்த உண்மையை எவரும் மறுத்திட முடியாது.

### துருக்கியில் சீர்திருத்தங்கள்

அரபுலக நாடுகளிலிருந்து சற்றே விதிவிலக்காக இருக்கின்ற ஒரே நாடு துருக்கிதான். இங்கு சகாப்தம் படைத்த சமூக சீர்திருத்தவாதியான முஸ்தபா கமால் அட்டாதுர்க் அவர்கள் துருக்கியின் சுதந்திரத்திற்கான போராட்டத்தை வெற்றிகரமாகத் தலைமையேற்று நடத்தி புதிய ஜனநாயக துருக்கிக் குடியரசை நிறுவினார். அங்கே, சமூகத்தை ஜனநாயகப்படுத்தும் முயற்சிகளைத் துணிந்து மேற்கொண்டார். அவர் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளில் முஸ்லீம் மதத்தலைவராக கருதப்பட்ட கலிஃபாவைப் பதவியிலிருந்து நீக்கியது, மத அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்த நீதி மன்றங்கள், பள்ளிகள் ஆகியவற்றை மூடியது, பொதுத்துறை ஊழியர்கள் தலைக்குல்லா அணிவதை தடைசெய்தது, மதச்சட்ட அமைச்சகத்தை ஒழித்தது, மத வழக்கத்தின்படி குல்லா அணியும் பழக்கத்தைக் கைவிடச் செய்தது, தொழில்மயத்தை ஊக்குவித்து, ஐரோப்பிய நாடுகளின் ஜனநாயகச் சட்டதிட்டங்களின்படி குறிப்பாக முற்போக்கான சுவிஸ்சர்லாந்து நாட்டின் சட்ட நெறிமுறைகளின் அடிப்படையில் புதிய சட்ட விதிகளை ஏற்றுக்கொண்டது, ஆகிய சீர்திருத்தங்கள் குறிப்பிடத்தக்கவை.

வரலாற்றில் முதல் முறையாக இஸ்லாமியச் சட்டங்களை மதச்சார்பற்ற ஜனநாயகச் சட்டங்களிலிருந்து பிரித்துவைத்து, அதனை மதவிவகாரங்களில் மட்டும் நடைமுறைப்படுத்தியது. “நீதி முறை பற்றிய கருத்துக்களையும் நமது சட்டங்களையும் மற்றும் சட்ட நிர்வாக அமைப்புகளையும் மதத்தின் பிணைப்பிலிருந்து விடுவிக்க வேண்டும் ஏனெனில், அவை இன்றும்கூட நமது நாட்டின் தேவைகளுக்குப் இணக்கமானவைகளாக இல்லை. இன்றும் அவைகள் நம்மீது இறுக்கமான பிடியை வைத்திருக்கின்றன” என்று முஸ்தபா பிரகடனம் செய்தார்.

சொத்துரிமை மற்றும் விவகாரத்து விஷயங்களில் ஆணுக்கு இணையாகப் பெண்கள் சம உரிமையைப் பெறுகின்றவகையில் அவர் புதிய சிவில் சட்ட நெறிமுறைகளை அறிமுகம் செய்தார். அவரது பார்வையின்படி, ஆண்களும் பெண்களும் ஒன்றாகக்கூடுகையில் அதன் லட்சியத்தை நோக்கி அது நடைபோடுகின்றது என்பதாகும். ஒரு கூட்டத்தில் அவர், பெண் கல்விக்கான உங்களது யுத்தத்தில் வெற்றிபெறுங்கள் அதன் மூலம் நாட்டுக்கு இன்னும் கூடுதலாக நீங்கள் பங்காற்றமுடியும் அது உங்களால் மட்டுமே முடியும் என்று பெண்களிடம் அறைகூவல் விடுத்தார். இனிவரும் காலங்களில் தேசத்தின் சமூக வாழ்க்கையில் பெண்கள் தங்கள் பங்களிப்பைச் செய்யவில்லையெனில் நாம் நமது முழுவளர்ச்சியை எட்ட முடியாது. மேற்கத்திய நாகரீகத்திற்குச் சரிசமமாக நம்மை நடத்துவதற்கு நாம் தகுதியற்றவர்களாக, மீட்டெடுக்க முடியாத பின்னடைந்த நிலையிலேயே நாம் இருக்க நேரிடும் என்று அவர் ஆண்களிடம் குறிப்பிட்டார்.

### தேவையாயிருக்கின்ற சமூக சீர்திருத்தம் என்ற இலக்கை பூர்ஷ்வாக்கள் இனிமேல் செயல்படுத்தமாட்டார்கள்

சரித்திரத்தின் இயல்பான போக்கினைத் தொடர்ந்து, காலாவதியாகிப்போன பிற்போக்கு நிலப்பிரபுத்துவ முடியாட்சி அமைப்பை தூக்கியெறிந்து, உண்மையைக் கண்டறியும் நுழைவாயிலாக அறிவியல் ரீதியிலான தர்க்கத்தையும் பகுத்தறிவையும் உயர்த்திப்பிடித்து, பழங்கால மத நம்பிக்கைகள், மூட நம்பிக்கைகள், பிற்போக்கு நடைமுறைகள் மற்றும் கொடுமையான பழக்கவழக்கங்கள் ஆகிய அனைத்திற்கும் எதிராகப் போராடி, அதன் பின்னர் சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதற்கான தலைகீழ் சமூக ஜனநாயக சீர்திருத்தங்கள் கொண்டுவந்து, ஒரு காலத்தில் புதிய சகாப்தம் தோன்றுவதை முன்னறிவித்த பூர்ஷ்வாக்கள் சீரழிந்த கட்டத்தை அடைந்துவிட்ட பின்னர், அவர்களே பிற்போக்காக, பின்னோக்கிச்சென்று, ஈவிரக்கமற்ற அடக்குமுறையாளர்களாக மாறிவிட்டனர் என்பதை புரிந்துகொள்ளவேண்டியுள்ளது.

ஆகவே, முந்தைய ஆட்சியாளர்களைப் போலவே பூர்ஷ்வா வர்க்கமும் தற்போது விரும்பப்படுகின்ற சமூக முன்னேற்றத்தின் முன்பு பிரதான தடையாக முன்நிற்கிறது. சாத்தியமான அனைத்து வகையிலும் தங்களின் காலாவதியாகிப்போன சுரண்டல் ஆட்சியை நீட்டிப்பதற்காக பூர்ஷ்வாக்கள் முயற்சிக்கிறார்கள். அவ்வாறாக பூர்ஷ்வா வர்க்கம் எடுக்கும் முயற்சிகளில் மிக முக்கியமானது சிந்தனைப்போக்கை பின்னோக்கிச்செல்ல வைப்பது, மக்களின் சிந்தனை முறையை மழுங்கடிப்பது மற்றும் அதன் மூலம் உண்மையைத் தெரிந்துகொள்வதற்கான கதவை அடைப்பதும் ஆகும். உண்மையைத் தெறிந்துகொள்வதற்கும், விஞ்ஞானப் பூர்வ சிந்தனைமுறைகளை பயன்படுத்துவதற்கும், விஞ்ஞானப்பூர்வ சிந்தனாமுறையைக் கொண்டிருப்பதற்கும் மக்கள் அனுமதிக்கப்படுவார்களேயானால் அதன் அடிப்படையில் அவர்கள் விஷயங்களைத் தீர்மானிப்பார்களேயானால், முதலாளித்துவம் காலாவதியாகியதும் அதன் பிற்போக்குத்தனங்களும், மக்களுக்குத் தெளிவாகத் தெரியவரும் என்று பூர்ஷ்வா வர்க்கம் அஞ்சுகின்றது. அழுகி நாற்றமெடுத்துப் போன இந்த முதலாளித்துவ சமூக அமைப்புதான் அனைத்து கேடுகளையும், கோளாறுகளையும், சமூக நோய்களையும், பாரபட்சம் மற்றும் இல்லாமையையும் உருவாக்குகிறது என்பதையும் காலாவதியாகிப்போன இந்த அமைப்புமுறையைப் புரட்சிகரமான வழிமுறையில் தூக்கியறிவதில்தான் மக்களின் விடுதலை அடங்கியிருக்கிறது என்பதையும் அது அவர்களுக்குத் தெளிவுபடுத்திவிடும்.

மக்களுக்கு இந்த உண்மை புரியவைக்கப்பட்டுவிட்டால், முதலாளித்துவ அமைப்புமுறையை உடைத்து நொறுக்குவதற்கான சரியான செயல்முறை இதுதான் என்று அவர்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுவிட்டால், இந்த ஒடுக்குமுறை முதலாளித்துவ அமைப்புமுறைக்கு எதிராக தங்களின் ஒன்றுபட்ட விழிப்புணர்வைக்கொண்ட எழுச்சியை மக்கள் முடுக்கிவிடுவார்கள், அதன் மூலம் முதலாளித்துவ எதிர்ப்பு பாட்டாளிவர்க்கப் புரட்சியை சாதிக்கும் பணி வேகமெடுக்கும். இதனால்தான், ஆளும் பூர்ஷ்வாவர்க்கம் அனைத்துவிதமான நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்கள், மத கண்மூடித்தனங்கள் மற்றும் மூடத்தனங்கள், இவைகளோடு சமரசம் செய்து கொள்வதோடு மட்டுமல்லாது பிற்போக்குச் சிந்தனையையும் வகுப்புவாத, அடிப்படைவாதச் சிந்தனைகளையும் அதுவே ஊட்டி வளர்க்கிறது. இவை போதாதென்று மதச் சட்டதிட்டங்களும் சம்பிரதாயங்களும் மாற்றமுடியாதவை என்றுகூறி, மதச் சிந்தனைகளுக்கும், மூடத்தனங்களுக்கும் அது வக்காலத்து வாங்குகிறது.

பூர்ஷ்வா வர்க்கத்தின் முழு லட்சியம் மக்களை கண்மூடித்தனம், மதவெறிவாதம், தவறான முன்னபிப்பிராயங்கள், பிடிவாதம், காரணகாரியமற்ற செயல்பாடு, விதிவசவாதம் இவற்றிற்குள் மூழ்கடிப்பதுதான். இந்தச் சூழ்நிலையில், வரலாற்று

தொடர்ச்சி 8ம் பக்கம்

## மனிதத் தன்மையற்ற முத்தலாஹ் முறை

# காலாவதியான மத சம்பிரதாயங்களை எதிர்ப்பது மதத்தை எதிர்ப்பதல்ல

7ம் பக்கத் தொடர்ச்சி

ரீதியில் மனித நாகரிகத்தின் மேம்பாட்டிற்குத் தலைமையேற்கும் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில், இந்த காலகட்டத்தின் மிக உயர்ந்த சித்தாந்தமாக இருக்கின்ற மார்க்சிசம் லெனினிசத்தின் அடிப்படையில் முதலாளித்துவ எதிர்ப்பு பாட்டாளிவர்க்கப் புரட்சிக்கான திட்டத்தில், மதம் மற்றும் பகுத்தறிவிற்குப் புறம்பான சிந்தனைகளுக்கு எதிராக, மதச்சார்பற்ற விஞ்ஞானப்பூர்வக் கண்ணோட்டத்தை விதைக்கும் பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியின் நிறைவேற்றப்படாத கடமைகளோடு அதனை ஒருங்கிணைத்துக் கொள்வதன் மூலமே எந்த ஒரு நாட்டிலும் சமூகத்தை ஜனநாயகப்படுத்துதல் என்பது இனிமேல் சாத்தியப்படும்.

### நமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் பலவீனங்கள்

தற்போது இந்தியச் சூழ்நிலை குறித்து இச்சகாப்தத்தின் முன்னணி மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவரான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் கீழ்க்கண்டவாறு விளக்கினார். மார்க்சிசத்தை பருண்மையான சூழ்நிலைமையில் பருண்மைப்படுத்தும் போக்கில் அவர் இந்தியச் சமூகத்தில் குறிப்பிட்ட வரலாற்றுக்காரணங்களால் ஜனநாயகப்படுத்துதல் என்பது முழுமைபெறவில்லை என்பதை மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டினார்.

அனைத்துவிதமான மத சிக்கல்களிலிருந்தும் விடுபடுவதற்குப் பதிலாக நமது தேசியத் தலைவர்கள் நமது புராணங்களிலும், காவியங்களிலும், போதிக்கப்பட்ட ஆன்மீக மதிப்புளை தேச விடுதலைப் போராட்டத்திற்கான கருத்தியல் அடிப்படையாகப் பயிற்றுவித்து உருவாக்க வேண்டுமென்று வாதாடினர். இந்த இந்துமதச்சார்புடைய தேசியவாதம் பரந்துபட்ட முஸ்லீம் மக்களை தேசியவிடுதலை இயக்கத்திலிருந்து விலக்கி வைத்ததுடன் ஜனநாயக சமூகத்தின் கோட்பாடுகளுக்கு ஒத்துவராத தங்களது இஸ்லாமிய மதவழக்கங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்களைத் தூண்டியது. இது மென்மேலும் பரந்துபட்ட முஸ்லீம் மக்களுக்கும் தேசியவாத சக்திகளுக்கும் இடையிலான இடைவெளியை அதிகரித்தது. இவ்வாறாக, வேறுபட்ட நம்பிக்கைகளைக் கொண்ட வெவ்வேறான சமூக மக்களை ஒன்றிணைத்து, ஒரே தேசமாக உருவாக்கும் கடமை நிறைவேற்றப்படாமல் விடுபட்டுப்போனது. ஆகவே, இந்திய முதலாளித்துவ சமூக அமைப்பில் நிலப்பிரபுத்துவ சமூகத்தின் மிச்ச சொச்சங்களாக நிலப்பிரபுத்துவ சிந்தனைகள், பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், மதக் கண்மூடித் தனங்கள், மூடத்தனங்கள் யாவும் இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன.

ஆகவே, நமது அரசியல் அமைப்புச் சட்டமும் கூட மதச்சார்பற்ற தன்மையுடன் பிறக்கவில்லை அதன் பல்வேறுபட்ட சட்ட உட்பிரிவுகளும், பகுதிகளும் முன்னுக்குப்பின் முரணாக இருப்பதையும் அரசியல் சட்டம் வரையப்பட்டபோது நிகழ்ந்த பல்வேறுபட்ட விரும்பத்தகாத சமரசங்களுக்கும் சாட்சியமாக இவை நிலைபெற்றுவருவதையும் நாம் இன்று காணமுடிகிறது. இன்றும்கூட, நாம் மேலே குறிப்பிட்டுக் காட்டியதைப்போல, நிலப்பிரபுத்துவத்தின் மிச்சசொச்சங்களையும் பலவீனங்களையும் தங்களின் சொந்த அரசியல் ஆதாயங்களுக்காக பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆதரவோடும் பின்புலத்தோடும் அடிப்படை வகுப்புவாத சக்திகள் பயன்படுத்திவருகின்றன.

முத்தலாஹ் முறையை தடைசெய்யக்கோரும் கோரிக்கையையும், முஸ்லீம் மதத்தலைவர்கள்–அடிப்படைவாதிகள் அக்கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதையும் முஸ்லீம் எதிர்ப்பு விஷத்தினை உமிழ்ந்து இந்து வகுப்புவாத ஆர்எஸ்எஸ்–பாஜக–சங்கப்பரிவாரங்களால் இப்பிரச்சினை மேலும் சிக்கலாக்கப்பட்டுவருவதையும் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், மேற்குறித்த இப்பின்னணி புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

### முத்தலாஹ் நடைமுறைப்படுத்தப்படும் விதம்

இந்தியாவில் முத்தலாஹ் முறை குறித்தும், இஸ்லாமியர்களுக்கான தனிப்பட்ட தனியுரிமை சட்டம் குறித்தும் சில விஷயங்கள் இங்கே குறிப்பிடப்படவேண்டும். இந்தியாவில் பல்வேறுபட்ட மதங்கள் மற்றும் சமூக இனக்குழுக்களுக்கு தனித்தனியான தனிப்பட்ட சட்டங்களும் (Personnel Law) அந்தந்த மாநிலத்திற்கேற்ப சட்டங்களும் உள்ளன.

கோவாவில் வசிக்கும் இந்துக்கள் இந்து திருமணச் சட்டத்தின் அடிப்படையில் திருமணம் செய்துகொள்வதில்லை. அதைப்போலவே பாண்டிச்சேரி மாநிலத்தில், காஷ்மீர் மற்றும் உத்திரப்பிரதேசத்தில் இருக்கின்ற முஸ்லீம் சட்டங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. கிருஸ்தவர்களாக இருப்பவர்கள் கிருஸ்தவ சட்டத்தைக் கொண்டிருக்கின்றனர், பார்சிகள் பார்சி சட்டத்தைக் கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவில் முஸ்லீம்களுக்கான பெர்சனல் லா அப்ளிக்கேசன் ஆக்ட் 1937 எனும் ஷரியத் சட்டத்தின்படி, கணவன் தன் மனைவியிடம் ஒரே சமயத்தில் மூன்றுமுறை தலாஹ் என்ற வார்த்தையை உச்சரித்து அவளை விவாகரத்து செய்யும் உரிமையை இச்சட்டம் வழங்குகிறது. தலாஹ் சொல்ல விரும்பும் கணவன் அதனை கடிதத்தின் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ, தந்தி அல்லது குருந்தகவல் மூலமாகக்கூட இதனைத் தெரியப்படுத்தமுடியும். இவ்வாறாக, தலாஹ் அல்லது மணமுறிவு செய்ய விருப்புவது கணவனின் கேள்விக்கு அப்பாற்பட்ட சிறப்புரிமையாக இருந்துவருகிறது. எப்படிப்பட்ட அற்பமான காரணங்களுக்காகவும் கூட கணவன் இந்த உரிமையை மனைவியின் மீது பயன்படுத்த முடியும். தலாஹ் கொடுக்கப்பட்ட பெண்கள் சமூகத்தால் புறக்கணிக்கப்படுவதும் அவமதிக்கப்படுவதும், கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுவதும், கைவிடப்படுவதும் தொடர்ந்து நடந்து வந்தபோதும் இந்த மதரீதியான வழக்கம் புனிதமானது என்ற பெயரில் மதச்சார்பற்ற இந்தியாவில் தொடர்கிறது. இதனை ஆல் இண்டியா முஸ்லீம் பெர்சனல் லா போர்டு போன்ற அடிப்படைவாத அமைப்புகள் உயர்த்திப்பிடிக்கின்றன.

இச்சட்டங்கள், உண்மையில் புனிதமானவை, ஆதலால் அவை மாற்றமுடியாதவை என்றால், அவை ஏன் சன்னி பிரிவு முஸ்லீம்களுக்கு பொருந்துவதாகவும், ஷியா பிரிவினருக்கு பொருந்தாதாகவும் இருக்கின்றது? இருவரும் இஸ்லாம் மார்க்கத்தைத்தானே பின்பற்றுகிறார்கள். பின் அநேக இஸ்லாமிய நாடுகளில் எவ்வாறு தலாஹ் சட்டங்களில் மாறுதல்களையும் சீர்திருத்தங்களையும் ஏற்படுத்த முடிந்தது?

பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்பகானிஸ்தான், ஈரான் போன்ற 20 நாடுகளில் முத்தலாஹ் சட்டம் தடைசெய்யப்பட்டிருப்பது எங்ஙனம்? எகிப்தில் மனைவியை விவாகரத்து செய்யும் கணவன் அவர்கள் வாழ்ந்த வீடு மற்றும் இன்னபிற வசதிகளை மனைவிக்கு வழங்கவேண்டுமென்ற நிபந்தனை உள்ளது. இவ்வாறான இந்த நிபந்தனைகளால் அங்கே விவாகரத்து செய்வோரின் விகிதாச்சாரம் குறைந்திருப்பதையும் நாம் அறிகிறோம். சிரியா நாட்டின் சட்டத்தில் உள்ள 72(1) சட்டப்பிரிவு கிட்டத்தட்ட இதுபோன்றே உள்ளது.

எகிப்து, துருக்கி, மொராக்கோ, ஈரான், ஆஜர்பைஜன், துனீசியா மற்றும் பாகிஸ்தானில் பலதார மணம் என்பது பெரும்பாலும் தடைசெய்யப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானில் முஸ்லீம் குடும்ப சட்ட மசோதாவில் திருத்தம் கொண்டுவந்தபின்பு ஜீவனாம்சம் தரவேண்டியது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், சவுதி அரேபியா, சிரியா போன்ற நாடுகளில் ஷரியத் சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கிறது. இந்தியா, ஸ்ரீலங்கா மலேசியா போன்ற நாடுகளில் இது தனிச்சட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும். துருக்கி மற்றும் இவைபோன்ற பல நாடுகளில் ஷரியத் என்பது சட்ட அமைப்பின் ஒரு பகுதியாகக்கூட இல்லை. துருக்கியிலும், சைப்ரஸிலும், மதச்சார்பற்ற குடும்பச் சட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஈரானின் ஷரியத் சட்டத்தின் கீழ் முத்தலாஹ் முறை என்பது செல்லாது.

இரண்டாவதாக, ஷரியத்திலும்கூட முத்தலாஹ் குறித்த விளக்கங்கள் வேறுபடுகின்றன. உதராணத்திற்கு, குடிபோதையிலிருக்கும் கணவன் மூன்று முறை தலாஹ் சொல்லிவிடுவானேயானால், ஹனாபி, மஜாஃப் விளக்கத்தின்படி முத்தலாஹ் செல்லுபடியாகும். ஆனால் ஹபாய் மஜாஃப் இதை அனுமதிக்காது. இஸ்லாமிய வரலாற்று அறிஞர்கள் பலரும் ஷரியத் என்பது புனிதக் குரானின் நகல் வார்த்தைகள் அல்ல, இவை பல்வேறு ஹனிபாக்கள் வழங்கிய வியாக்கியானங்களாகும். உண்மை என்னவெனில், அரேபிய மண்ணைக் கடந்து இஸ்லாம் உலகின் பல்வேறுபட்ட நாடுகளுக்குப் பரவிய காலக் கட்டங்களில் இஸ்லாமியத்தைப் பின்பற்றியவர்கள் சமூக வாழ்கையில் எண்ணற்ற பிரச்சினைகளை எதிர்கொண்டனர்.

இஸ்லாமியப் புனிதநூலான குரானின்படி இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு மக்கள் புனிதக் குரானை ஆழமாக அறிந்தவர்களாகவும், உயர்ந்த குணாம்சம் பொருந்தியவர்களாகவும், நெறிப்படி வாழ்ந்த புகழ்பெற்ற மனிதர்களிடத்தில் கருத்துக்களைக் கேட்டறிந்தனர். இந்தப் புகழ்பெற்ற மனிதர்கள் புதிது புதிதாக எதிர்கொண்ட பிரச்சினைகள் குறித்து மதச்சிந்தனைகளையும், மதக்கட்டளைகளையும் அவர்கள் புரிந்து கொண்டதன் அடிப்படையில் தீர்ப்புகள் வழங்கினர். இவை அனைத்தையும் உள்ளடக்கியதுதான் ஷரியத் சட்டமாகும். ஆனால், அவையாவும் அகவயப்பட்டதாக இருந்ததினால், அவர்களின் விளக்கவுரைகளில் மேலும் மாறுபட்ட கருத்துக்கள் எழுந்தன. ஷரியத்தில் நான்கு இமாம்களின் விளக்கவுரைகளால் தொகுக்கப்பட்ட மஜாஃபை சன்னி பிரிவு முஸ்லீம்கள் பின்பற்றினாலும், இந்த நான்கு இமாம்களின் கருத்துக்கள் பல்வேறு விஷயங்களில் மாறுபட்டிருந்தன.

முஸ்லீம் மதத்தவர்களில் அஹ்லே ஹதீஸ் என்ற பிரிவினர் ஒருதலைப்பட்சமாக, ஒரே சமயத்தில் மூன்று முறை தலாஹ் சொல்வதை ஏற்றுக்கொள்வதில்லை. இஸ்லாமிய வரலாற்றை விவரிக்கும் ஒரு வர்ணனையாளர், "முத்தலாஹ் என்பது கடவுளின் சித்தத்தின் அடிப்படையில்தான் என முஸ்லீம்கள் நம்பவைக்கப்பட்டிருக்கின்றனர். இது உமையாத் முடியாட்சியாளர்களின் கட்டளைப்படி பணிந்து செல்லும் முஸ்லீம் மதகுருமார்கள் கண்டுபிடித்த சட்டரீதியிலான ஏமாற்று வேலை. முகமது நபியின் இறப்பிற்குப் பிந்தைய இரண்டாம் நூற்றாண்டின் போது இவ்வாறு நிகழ்ந்திருக்கின்றது" என்று கூறுகிறார். (டைம்ஸ் ஆஃப் இந்தியா, 2016 நவம்பர் 4, இதழின் ஹனித் முராப் கட்டுரை)

அவர் மேலும் கூறுகையில், "இஸ்லாம் மதப்படி, திருமணம் என்பது ஒரு புனிதச்சடங்கல்ல, ஆனால் அது ஒரு சிவில் ஒப்பந்தம். பாகிஸ்தான் உச்ச நீதிமன்றமானது, முஸ்லீம்களிடையே திருமணம் என்பது ஒரு புனிதச்சடங்கல்ல, ஆனால் அது ஒரு சிவில் ஒப்பந்தமாக இருக்கின்றது என்கின்றது. அத்தகைய ஒரு ஒப்பந்தத்திற்கு சந்தேகமின்றி ஒரு ஆன்மீக மற்றும் தார்மீக உள்ளடக்கங்கள் இருந்தாலும், சட்டரீதியில் மற்றும் சாராம்சத்திலும் இது இரண்டு தரப்பினருக்கிடையேயான ஒரு ஒப்பந்தமாகவே இருந்துகொண்டிருக்கின்றது" என்றார்.

மற்றொரு வர்ணனையாளர் கூறுகையில், "இரண்டுபேர் ஒருமுறை தங்களின் திருமண உறவை உடனடியாக முறித்துக்கொள்ள விரும்பினர். அதற்காக அவர்கள், தலாஹ் என்ற சொல்லை மும்முறை உச்சரித்தனர். இதனையறிந்த முகம்மது நபிகள் கடுங்கோபமடைந்தார். இது ஹாடிட்ஸ் எனப்படும் ஆறு நூல்களில் பதிவுசெய்யப்பட்ட நம்பகமான சம்பவமாகும்." அவரது வார்த்தைகளில், "நான் இன்னும் உயிரோடுதான் இருக்கின்றேன். குரானின் சட்டத்தை நீங்கள் மிகவும் கேலிக்கூத்தாக ஆக்குகிறீர்களா?" என்றார். அவர் அந்த முத்தலாஹ்கை செல்லாததாக்கிவிட்டார். திருமண வாழ்க்கை தொடர்ந்தது . . . உண்மையான குரான் சட்டத்தில் முத்தலாஹ்கு அனுமதி கிடையாது. முத்தலாஹ் என்ற சொல் குரானில் எவ்விடத்திலும் பிரயோகிக்கப்படவில்லை. இது கேலிக்கூத்தானது என்றார். (பேராசிரியர் தாஹிர் முகமது, முன்னாள் என்சிஎம் தலைவர் பிரண்ட்லைன் நவம்பர் 11, 2016 இதழ்) இந்த அனைத்து எடுத்துக்காட்டுகளும் முத்தலாஹ் என்பது புனிதச் சட்டம் அல்ல என்பதையும், இது மாற்றப்பட முடியாது என்று சொல்வது பொருத்தமுடையதல்ல என்பதையும் காட்டுகிறது.

தொடர்ச்சி 9ம் பக்கம்

## மனிதத் தன்மையற்ற முத்தலாஹ் முறை

# பெண்ணின விரோத நடைமுறைகளை எதிர்க்கும் இயக்கம் பரந்துபட்ட ஜனநாயக இயக்கத்துடன் இணைக்கப்பட வேண்டும்

7ம் பக்கத் தொடர்ச்சி

### மதம் என்பதும் மத அடிப்படையிலான நெறிமுறைகள், பழக்கவழக்கங்கள், நடைமுறைகள் என்பதும் வேறுபட்டவை

*சமூகத்தை ஜனநாயகப்படுத்துகின்ற கடமை நிறைவேறாத, ஜாதி, மதம், மொழி இனம் என்ற பாகுபாட்டால் வேறுபட்டுக்கிடக்கின்ற குறிப்பாக மக்களிடையே காணும் இந்த வேற்றுமைகள் தூண்டிவிடப்பட்டு அவை சம்பந்தமான பிரச்சினைகள், முரண்பாடுகள் சர்ச்சைகள் எழுந்தால் இப்பிரச்சினைகளை எவ்வாறு அணுகவேண்டும் என்பதற்கு தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் வழங்கியிருக்கின்ற மதிப்பு மிக்க போதனைகளை, வழிகாட்டுதலை நினைவுக்குக் கொண்டுவருவது இங்கே மிகவும் பொருத்த முடையதாக இருக்கும்.*

*ஜனநாயக இயக்கங்களுக்கான திட்டத்தில்.... இன்றுவரையில் நிறைவேற்றப்படாத நிலையில் இருக்கும் சமூகக் கலாச்சாரப் புரட்சிக் கடமைகள் இணைத்துக் கொள்ளப்படவேண்டும். இந்தக் கடமைகள் நிறைவேற்றப்படாமல் சமூக ரீதியிலான மற்றும் மத அடிப்படையிலான முன்னபிப் பிராயங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் மத ஸ்தாபனங் களின் பிடியிலிருந்தும் மக்கள் விடுவிக்கப்படாமல் சமூகரீதியிலும் கலாச்சார ரீதியிலும் அவர்களை பிரித்துவைக்கின்ற தடைகள் உடைத்தெறியப் படாமல் அவர்கள் அரசியல் ரீதியில் மட்டுமல்லாது சமூகக் கலாச்சார ரீதியில் முழுவதும் ஒன்றுபட்ட ஒரு சமூகமாக மாற்றமடையாமல் வகுப்புவாதம் யதார்த்தத்தில் களையப்படமுடியாது.*

*. . . இங்கே ஒரு விஷயத்தை மிக அழுத்தமாக மீண்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இது மதத்திற்கு எதிராகத் தொடுக்கப்படும் போராட்ட மல்ல. மாறாக, இந்த இயக்கமானதே மத நம்பிக்கை கொண்டோர், மத நம்பிக்கை கொள்ளாதோரின் சமத்துவம் மற்றும் சுதந்திரத்தினை அடிப்படை யாகக் கொண்டுள்ளது.*

*. . . மதம் என்பதும் மத வழக்கங்கள் என்பதும் இருவேறுபட்டவை. மாறுகின்ற சமூக நிலைமை களுக்கு பொருந்துகின்ற வகையில் மத வழக்கங்கள் என்பன கடந்த காலங்களில் மாறியிருக்கின்றன. எதிர்காலத்திலும் மாறும். ஆக, ஏற்கனவே சமூகத்தில் இருந்துவருகின்ற மத வழக்கங்கள் மாற்றப்பட வேண்டும் என்று போராடுகிறவர்களை மதத்திற்கு எதிரானவர்கள் என்றோ அல்லது மதத்தை கைவிட்டவர்கள் என்றோ குற்றம் சாட்டிட முடியாது.*

*ஒரு உண்மையான இஸ்லாமியராக இருந்து கொண்டு, துருக்கியை ஜனநாயகப்படுத்துவதற்குத் தடையாக இருந்த இஸ்லாமிய மதவழக்கங்களை எதிர்த்து கமால் அட்டாதுர்க் போராடவில்லையா? நாசர், அவரது நாட்டில் பல இஸ்லாமிய மத வழக்கங் களையும் நிறுவனங்களையும் அகற்றிக்கொண்டி ருந்ததால், அவர் ஒரு முஸ்லீம் இல்லையென்றாகி விடுமா? எந்த ஒரு முஸ்லீமும், எந்த இஸ்லாமிய மத வழக்கங்களையும் நடைமுறையில் பின்பற்றாத முகமது அலி ஜின்னாவை முஸ்லீம் அல்லாதவர் என்று ஒதுக்கமுடியுமா?*

*இந்துக்கள் இதற்குமுன்பு பின்பற்றிவந்த பல்வேறு மத சம்பிரதாய வழக்கங்களை கைவிட வில்லையா? ஜனநாயக இயக்கமானது, இன்றைய சமூகத் தேவைகளுக்கு எதிராக இருக்கின்ற அனைத்துவித மத சம்பிரதாய வழக்கங்களுக்கும் எதிராக இடையறாத போராட்டத்தை நிச்சயமாக நடத்தும். ஆனால், அது மதத்திற்கு எதிராக அல்ல. (வகுப்புவாதப் பிரச்சினைகள் குறித்து தேர்வு நூல் தொகுதி 2 பக்கம் 181–83 )*

### பெண்களின் விடுதலை என்பதே உண்மையான கேள்வி

ஆக, முத்தலாஹ் முறையை அல்லது இதுபோன்ற நடைமுறையை ஓர் முடிவுக்குக்கொண்டுவரும் விஷயத்தில் நமது பார்வை அல்லது நிலைபாட்டை வரையறுக்கும்போது, பிரதானமானதாக இருந்திட வேண்டியது, ஒரு காலத்தில் மதத்தின் அடிப் படையில் கொண்டுவரப்பட்ட மாற்றிட முடியாத விளக்கங்கள் குறித்த கேள்வியில் நிலவிய பகுத்தறிவுக்கு ஒவ்வாத, வளைந்துகொடுக்காத தன்மையா? அல்லது தீவிர இந்து வகுப்புவாத சக்திகளான ஆர்எஸ்எஸ்–பாஜக ஆகியவை தூண்டி விடும் திட்டமிட்ட குழப்பங்களா? அல்லது தொன்று தொட்டு இருந்துவரும் அடிமைத்தளையினால், ஆணாதிக்க அடக்குமுறையினால் திணிக்கப் படுவதிலிருந்துமான பெண்ணின விடுதலையா? இதில் எதனை உண்மையான மனித கண்ணோட்ட மாக ஏற்றுக்கொள்வது? இதில் எது சமூக முன்னேற்றத்தின் கதவினை வேகமாகத் திறந்துவிடும்?

முத்தலாஹ் கொடுக்கப்பட்டு கணவனால் கைவிடப்பட்டு நிர்க்கதியாக நிற்கின்ற பெண்களின் துன்ப துயரங்கள் குறித்து அக்கறைப்படுகின்ற அனுதாபம் கொள்கின்ற எந்த நபரும் சரியான சிந்தனை கொண்ட ஒவ்வொரு நபரும் நிச்சயமாக அனைத்துப் பெண்களின் விடுதலை குறித்த கேள்விக்கே முக்கியத்துவமளிப்பர். ஆனால் எவ்வாறு அந்த விடுதலையை அடைய முடியும்?

முதலாவதாக, பிறபகுதி ஒடுக்கப்படும் மக்களுடன் சகோதரத்துவத்துடன் இணைந்து இந்த சீர்திருத்தத் திற்கான கோரிக்கை முஸ்லீம் மக்களிடமிருந்து முதலில் வரவேண்டும். முஸ்லீம் அல்லாத மக்களிட மிருந்து இக்கோரிக்கை எழுப்பப்படுவதாலோ அல்லது சட்டத்தை இயற்றுவதின் மூலம் அரசாங்க மானது தலையிட்டாலோ விரும்பிய நோக்கத்தை அடைந்திட முடியாது அல்லது இத்தகைய சீர்திருத் தத்தை முஸ்லீம் சமூகம் ஏற்றுக்கொள்ளாது. மாறாக, மத அடிப்படைவாதத்தை நோக்கிச் சாய்ந்து சென்றிடவுமான அல்லது வகுப்புவதப் பிளவை இன்று காண்பது போன்ற விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திட ஏதுவாகலாம்.

சதி என்னும் காட்டுமிராண்டித்தனமான உடன் கட்டை ஏறுவதை ஒழித்திட ராஜாராம் மோகன்ராய் மேற்கொண்ட சரித்திரபூர்வ முயற்சியும் விதவைகள் மறுமணத்தை அறிமுகப்படுத்த வித்தியாசாகர் மேற்கொண்ட விடாப்பிடியான முயற்சியும் அது ஹிந்து அல்லாதோரிடமிருந்து எழுப்பப்பட்டிருக்கு மானால், அப்போதைய பிரிட்டிஷ் அரசு ஒரே சட்டத்தின்மூலம் தடைசெய்திருந்தால் ராஜாராம் மோகன்ராய், வித்யாசாகர் ஆகியோரது முயற்சிகள் ஒருபோதும் வெற்றிபெற்றிருக்காது என்பதை நாம் நினைவிற்கொள்ளவேண்டும். இந்து மக்களிட மிருந்தே அக்கோரிக்கைகள் எழுப்பப்பட முடிந்த தாலும், பரந்துபட்ட இந்து மக்களிடமிருந்து இந்து மதகுருமார்களை ஓரங்கட்டி, அவர்களை தனிமைப் படுத்த முடிந்ததாலும் அவர்கள் வெற்றிபெற்றனர்.

சரியான உணர்வுமட்டம் முஸ்லீம் பெண்கள் மற்றும் ஆண்கள் மத்தியில் எழுந்து, அவர்களின் இலட்சியமானது ஈவிரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டலின் கீழ் சிக்கி ஒடுக்கப்பட்டுக்கொண்டி ருக்கும் பாடுபடும் பிறபிரிவு மக்களின் விடுதலை யோடு பிரிக்கவியலாதபடி தொடர்பு கொண்டுள்ளது என்பதை உணர்ந்துகொண்டால் மட்டுமே, பின்னர் நாம் விரும்புகின்ற பெண்ணின விடுதலை என்பது ஏற்பட முடியும்.

முஸ்லீம் மத வழக்கமான முத்தலாஹ்கை தடை செய்யக் கோருதல் என்பதும், இந்துமத வழக்கமாக இருந்துவருகின்ற கௌரவக் கொலை, பெண்சிசுக் கருக்கலைப்பு ஆகியவைகளைத் தடைசெய்யக் கோருவதாயினும் இரண்டும் ஒரே தன்மையுடையன என்கிற கருத்து வலியுறுத்தப்பட வேண்டியது அவசிய மாகும். இரண்டுமே பெண்களுக்கு எதிரானது, பிற்போக்கானது, காட்டுமிராண்டித்தனமானது.

ஆக, முத்தலாஹ் போன்ற மிகவும் பிற்போக்கான பின்னோக்கிய சமூக வழக்கங்களை சீர்திருத்தவோ அல்லது அகற்றிடவோ போராடுகையில், அக்கோரிக் கைகள் நியாயமாக முஸ்லீம் மதத்தவர்களிடமிருந்து எழவேண்டும், எழுப்பப்படவேண்டும். தவறான பாதையில் அப்போராட்டத்தை திசைதிருப்பிட மத அடிப்படைவாத சக்திகளுக்கு எவ்வித வாய்ப்பும் அளிக்காதவண்ணம் அல்லது அதுபோன்ற நியாயமான போராட்டங்கள் முஸ்லீம் எதிர்ப்பு சக்திகளால் தூண்டிவிடப்பட்டது என முத்திரை குத்தப்பட்டு குழப்பத்தை ஏற்படுத்திடாவண்ணம் அத்தகைய கோரிக்கையானது மிகப்பெரும் போராட்ட வடிவில் மிகச்சரியானதொரு தர்க்கத்தின் அடிப்படையில் தெளிவுபடுத்தப்பட்டு பருண்மைப் படுத்தப்பட வேண்டும். இம்மாதிரியான காட்டு மிராண்டித்தனமான வழக்கங்களையும் நடைமுறை களையும் கைவிடக்கோரும் முஸ்லீம் பெண்களின் இதுபோன்ற நியாயமான சீர்திருத்தப் போராட்டங்கள் மென்மேலும் உத்வேகத்துடன் வளர்ந்தெழவேண்டு மெனில் அவை செயற்கையாக தூண்டிவிடப்படும் பிரிவினை எண்ணங்களிலிருந்து விடுபட்டு உயர்ந்த பாட்டாளி வர்க்க நீதி நெறிகளின் அடிப்படையில் செயல்படும் புரட்சிகரத் தலைமையின் கீழ் ஜாதி, மத, இனம், பிரிவு என்ற எல்லைகளைக் கடந்து பாடுபடும் அனைத்துப் பிரிவு மக்களையும் போராட்டத்திற்குள் இடம்பெறவைத்து, பங்காற்ற வைத்து, ஜனநாயக வெகுஜன இயக்கங்களை தொடர்ச்சியாக நடத்தும்போதுதான் அவை வலிமை பெற்றுத் தீவிரமடையும். இந்தப் போராட்டங்களில் ஆண், பெண், இந்து, முஸ்லீம், கிருஸ்தவன், பீஹாரி, குஜராத்தி, மலையாளி, உருது பேசுகிறவன், தமிழ்பேசுகிறவன் என ஒடுக்கப்படுகின்ற அனை வரையும் ஒரு பொது நோக்கத்திற்காக ஒருங் கிணைத்த அத்தகைய கலாச்சார சூழலுடனான விழிப்புணர்வுடன் கூடிய போராட்டத்தில் அவர்கள் ஈடுபடுத்தப்படும்போது, அவர்களுக் கிடையே உள்ள நம்பிக்கையற்ற தன்மை, வெறுப்பு, பரஸ்பரம் சந்தேகம் மற்றும் கண்மூடித்தனங்கள், பழமையான எண்ணங்கள் மற்றும் திட்டமிட்டுச் உள்நுழைக்கப்படும் கெடுநோக்கங்கள், மக்கள் ஒற்றுமையைக் குலைக்கும் எண்ணங்கள் ஆகியவை படிப்படியாக காலப்போக்கில் துடைத்தெறியப்படும்.

பிற்போக்கு சக்திகளின் திட்டமிட்ட சதியினால் வகுப்புவாத பதற்றம் மற்றும் மோதலுடன் சூழ்நிலைமை தீவிரமடையும்போது, ஜனநாயக சக்திகள் மேலே விவாதித்தவாறு பரந்துபட்ட வெகுஜன இயக்கங்களை நோக்கி இட்டுச்செல்லும் வகுப்புவாத எதிர்ப்பு இயக்கத்தினைகட்டியமைத்து அதனை உக்கிரப்படுத்தியாக வேண்டும். முஸ்லீம் ஆணும் பெண்ணும்கூட அநீதிக்கெதிரான போராட்டத்தின் நியாயத்தன்மையை உணர்ந்த பிறபகுதி சமூகத்தைச் சேர்ந்த இன்னலுறும் மக்களின் ஆதரவின்றி தம் கோரிக்கை வென்றெடுக்கப் படமுடியாது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆக, முஸ்லீம், இந்து ஆகிய இரண்டு சமூகத்தையும் சார்ந்த மனசாட்சி கொண்ட மக்கள் இத்தகைய மிகவும் முக்கியமான அம்சங்களை அக்கறையுடன் தீவிரமாக எண்ணிப்பார்த்து, மத அடிப்படைவாதிகளாலும் பிற பிற்போக்கு சக்திகளாலும் ஒடுக்கப்படும் முஸ்லீம் பெண்களின் நியாயமான கோரிக்கை திசைதிருப்பப் படாமலிருப்பதை உத்திரவாதப்படுத்திட வேண்டும் என்பதே நம் அறைகூவலாகும் ■

## 131வது மேதின அனுஷ்டிப்பு




சென்னை கொருக்குப்பேட்டையில் மே 1, 2017 அன்று நடைபெற்ற மேதினப் பொதுக்கூட்டத்தில் தோழர் ரெங்கசாமி, மாநிலச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகின்றார், கூட்டத்தில் கலந்துகொண்டோர்

# மருத்துவத்துறை சந்திக்கும் பேரழிவை தடுத்துநிறுத்த மக்கள் முன்வரவேண்டும்

2ம் பக்கத் தொடர்ச்சி

சில மாநிலங்கள் ஒரு அரசு மருத்துவக் கல்லூரியைக் கூட உருவாக்கவில்லை. ஆனால் சில மாநில அரசாங்கங்கள் அந்த மாநில மக்களின் வரிப் பணத்தில் ஓரளவு கணிசமான எண்ணிக்கையில் மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கியுள்ளன. இந்த நிலையில் அந்த கல்லூரிகளின் எண்ணிக் கைக்கு ஏற்றவாறு அந்த மாநில மாணவர்கள் தேர்ச்சி பெறாவிட்டால் அந்த இடங்களை யார் மூலம் நிரப்புவார்கள்?

ஏற்கனவே மத்தியப் பிரதேசத்தில் வியாபம் ஊழலில் எந்த அளவிற்கு மருத்துவ படிப்பு சேர்க் கையில் ஊழல் நடைபெற்றது என்பதை எடுத்துக் காட்டியது. அதேபோல் 2016ஆம் ஆண்டு கேந்திரிய வித்யாலயா பள்ளிகளுக்கான ஆசிரியர் நியமனத் தேர்வு வினாத்தாள் வெளியானதால் தேர்வு ரத்து செய்யப்பட்டது. சிபிஎஸ்இயிலும் போதிய எண்ணிக்கையில் ஊழியர்கள் இல்லை. வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் வெவ்வேறு வகையான கட்டமைப்பு வசதிகள் உள்ளன. அந்தந்த மாநிலங்கள் அவரவர் கட்டமைப்பு வசதிக்கேற்ப மாணவர் சேர்க்கையை நடத்துவதே ஓரளவிற்கு உகந்ததாக இருக்கும். மாறாக ஏற்றத்தாழ்வுகள் ஏராளமாக உள்ள நிலையில் நாடுமுழுவதும் ஒரே நுழைவுத் தேர்வு என்பது சாமானிய ஏழை எளிய மாணவர்களின் மருத்துவப் படிப்பையே கேள்விக்குறியாக்கிவிடும்.

## ஒரே நுழைவுத் தேர்வு – மத்திய அரசாங்கத்தின் கொள்கை முடிவு

நீட் என்பது உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் படிதான் நடைபெற உள்ளது என்று மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். அதாவது மத்திய அரசாங்கத்திற்கு இதில் பங்கேதும் இல்லை என்று தெரிவித்துள்ளார். ஆனால் உண்மையில் உயர்கல்விச் சேர்க்கைக்கு ஒரே நுழைவுத் தேர்வை நடத்த வேண்டும் என்று என்சிஇஆர்டி வெளியிட்ட தேசிய பாடத்திட்ட வரைபடம் 2005 கூறியுள்ளது. அதை நாட்டில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும் மாணவர் சேர்க்கைக்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை ஒரு நாள் பள்ளிக்கு வந்தால்கூட கட்டாயத் தேர்ச்சி அளிக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்துள்ளனர். ஆனால் 12ஆம் வகுப்பிற்குப் பிறகு அகில இந்திய அளவில் தேசிய நுழைவுத் தேர்வு நடத்த வேண்டும் என்றால் அது எத்தகைய விளைவை ஏற்படுத்தும்? அந்த முடிவைத்தான் முதலில் மருத்துவக் கல்வி சேர்க்கைக்கு செயல் படுத்துகின்றனர். பின்னர் அது மெல்ல மெல்ல அனைத்து உயர்கல்விக்கும் நீட்டிக்கும் முயற்சியும் இதில் அடங்கியுள்ளது. எனவே இந்த முடிவு என்பது உச்ச நீதிமன்ற உத்தரவால் மட்டும் நடக்க வில்லை. காங்கிரஸ், பாஜக, அதிமுக, திமுக மற்றும் பல கட்சிகளின் ஆதரவோடு ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட ஆவணத்தின்படியான கொள்கை முடிவே ஆகும்.

## 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வை ரத்து செய்யும் முயற்சி

10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் தேசியப் பாடத்திட்ட வரைபடம் 2005 கூறுகின்றது. அதாவது அந்தத் தேர்வுகளை ரத்து செய்ய வேண்டும் என்பதே இதன் சாராம்சமாகும். இனி உயர்கல்விக்கு செல்ல தேசிய அளவிலான நுழைவுத் தேர்வு அவசியம் என்றால் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு மதிப்பெண் முக்கியத்துவம் பெறாது. உயர் கல்விக்கு செல்ல விரும்புவோர் தனியார் கோச்சிங் சென்டர்களில் படித்துக்கொள்வர். செல்ல முடியாதோர் படிக்கும் அரசாங்கப் பள்ளி மாணவர்கள் பெயரளவிற்கு முக்கியத்துவம் குறைக்கப்பட்ட பொதுத் தேர்வுகளை எழுதுவர். இதன்மூலம் பொதுத் தேர்வுகளை இலகுவாக ரத்து செய்யும் ஆயுதமாக இந்த நுழைவுத் தேர்வைக் கொண்டுவருகின்றனர்.

## அதிகாரத்தை மத்திய அளவில் மையப்படுத்திக் குவிக்கும் முயற்சி

மத்தியில் ஆட்சிபுரிந்த காங்கிரஸ் 1986ல் கொண்டுவந்த புதிய தேசியக் கல்விக் கொள்கை, தற்போது ஆட்சி செய்துவரும் பாஜக 2016ல் கொண்டுவந்த புதிய தேசியக் கல்விக் கொள்கை ஆகியவை கல்விதுறை முழுவதுமே தனியார்மயம் வியாபாரமயம் ஆக்கிவருகிறது. மேலும் நீண்ட நாட்களாகவே கல்வியமைப்பை மத்தியத்துவப் படுத்தவும் முயற்சிகளை எடுத்து வருகின்றன. இந்த போக்கே நீட் தேர்வை அறிமுகப்படுத்தியதிலும் தொடர்கிறது.

ஹிந்தி, ஹிந்து, ஹிந்துஸ்தான் என்ற கோஷத்தை முன்வைக்கும் பாஜக ஹிந்தியைத் திணிக்கவும் தீவிரமாக முயன்றுவருகிறது. மிக சமீபத்தில் அனைத்து சிபிஎஸ்இ பள்ளிகளிலும் ஹிந்தியை கட்டாயமாக்க மத்திய பாஜக அரசாங்கம் சுற்றறிக்கை விடுத்துள்ளது.

இது ஒருபுறமிருக்க 'நீட்' தேர்வினால் மாநில கல்வி வாரிய மாணவர்கள் பாதிக்கப்படுவதை சுட்டிக்காட்டப்பட்டபொழுது பாஜக தலைவர்கள் அனைத்து பள்ளிகளிலும் சிபிஎஸ்இ பாடமுறைக்கு மாறுவதை ஒரு தீர்வாக கூறுகின்றனர். இப்பொழுது உண்மை வெளிவந்துவிட்டது அல்லவா? பிரதானமாக அனைத்துப் பள்ளிகளும் சிபிஎஸ்இ பள்ளிகளாக மாறிவிட்டால் அதன்மூலம் ஹிந்தியை திணிக்கவும் இந்த நீட் தேர்வுத் திணிப்பு என்பது உதவுகிறது என்பது சொல்லாமலே விளங்கும். மேலும் பொறியியல் படிப்பிற்கும் இதுபோன்றதொரு தகுதித்தேர்வு 2018இல் அறிமுகப்படுத்தப்படும் என ஏற்கனவே மத்திய அரசாங்கம் அறிவித் துள்ளது. இதுபோல உயர்கல்வியின் அனைத்துத் துறைகளிலும் மாநில அரசாங்கங்களின் அதிகாரத்தை சீர்குலைத்து தனது அதிகாரத்தின்கீழ் கொண்டுவர பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கம் எத்தனிக்கிறது.

கல்வியில் அந்நியப் பல்கலைக்கழகங்களை இந்தியாவில் கொண்டுவரும் முயற்சியாக நாட்டின் கல்வித் துறை முழுமையையும் ஒரே அமைப்பான என்சிஹெச்இஆர் (உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான தேசிய ஆணையம்) கீழ் கொண்டு வரவும் பரிந்துரை உள்ளது. அதாவது அந்நிய நிறுவனங்கள் இங்கு முதலீடு செய்தால் ஏஐசிடிஇ, எம்சிஐ, பார் கவுன்சில் போன்ற பல்வேறு அமைப்பு களிடம் அனுமதி பெறுவதற்கு மாறாக, நடைமுறை செயல்களை எளிதாக்குவதற்காக அவை எல்லா வற்றையும் கலைத்துவிட்டு ஒரே அமைப்பாக என்சிஹெச்இஆர்–ஐ உருவாக்க முடிவு செய்துள்ளனர். அந்த அமைப்பு பாடத்திட்டம், தேர்வுகள், பட்டம் வழங்குதல் உள்ளிட்ட அனைத்தையும் மையப்படுத்த விழைகிறது. எனவேதான் மாணவர் சேர்க்கைக்கும் ஒரே மாதிரியான தேர்வைக் கொண்டு வர முயற்சிக் கின்றனர். இதன்மூலம் கல்வியை மாநில அரசுகளின் கட்டுப்பாட்டிலிருந்து முற்றிலுமாக மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு செல்லும் முயற்சியே இதுவாகும். ஏற்கனவே பல்வேறு துறைகளில் இதுபோன்ற அதிகாரக் குவிப்பு நடைபெற்று வருகையில் கல்வியிலும் அதே முயற்சியைச் செய்கின்றனர்.

நமது நாட்டில் சீரற்ற வளர்ச்சி நிலவுகின்றது. மாநிலத்திற்கு மாநிலம் கல்வித் திறன் மேம்பாடு வெவ்வேறு விதமாக உள்ளது. எனவே சமமற்ற நிலை நிலவுகின்றது. இப்படிப்பட்ட சூழலில் அனைத்து மாணவர்களையும் ஒரே தகுதித் தேர்வை எழுதச் சொல்வது பாரபட்சமான சூழலையே உருவாக்கும். மத்திய அரசாங்கம் உண்மையிலேயே கல்வியின் தரத்தை மேம்படுத்த விரும்பினால், முதலில் ஏராளமான அரசாங்கப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நாடுமுழுவதும் திறக்கவேண்டும். ஆனால் அதைச் செய்ய மறுத்து விட்டு நாடு முழுவதும் தகுதிகாண் நுழைவுத் தேர்வு என்றால் அது வசதிபெற்ற பள்ளிகளில் படிக்கும் சலுகைப் பிரிவினருக்கு மட்டுமே சாதகமாகும். இதன்மூலம் சில குறிப்பிட்ட இடங்களில் பயில்பவர்கள் உயர்கல்விக்கு செல்லும் நிலை உருவாகும். இதனால் அந்தப் பள்ளிகளின் பெயரும் புகழும் வளரும். அந்தப் பள்ளிகளை மட்டுமே மாணவ மாணவியர் நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர். கல்விக்கட்டணம் மேலும் உயரும். எனவே உயர்கல்வியை விரும்புபவர்கள் இனி தனியார் பள்ளிகளை மட்டுமே நாடவேண்டி யிருக்கும். ஏதோ ஒரு கல்வியைப் பெற விரும்பு வர்கள் மட்டுமே அரசாங்கப் பள்ளிகளை நாடும் நிலைக்குத் தள்ளப்படுவர். இது பள்ளிக்கல்வியை முற்றிலும் தனியார்மயமாக்கும் போக்கினை துரிதப்படுத்தவே உதவும்.

## கல்வி–மருத்துவத்தில் வியாபாரமயமும் உண்மையான தீர்வும்

கல்வி தனியார்மயமாக்கப்பட்டுவிட்டதால் ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி என அனைத்து மட்டங்களிலும் கல்விக்கட்டணம் ஆயிரக்கணக்கில் தொடங்கி கோடிகள் வரை சென்று விட்டது. 90% மேல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியருக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைப்பதில்லை. ஆனால் 50% மதிப்பெண் பெற்றவர்கள் கூட தனியார் மருத்துவக் கல்லூரி களில் பல லட்சக்கணக்கான ரூபாய் நன்கொடை யாகக் கொடுத்து மருத்துவப் படிப்பில் சேருகின்றனர். அதாவது அரசாங்க கல்லூரிகளில் குறைந்த கட்டணத்தில் படிக்க வேண்டுமென்றால் தரம் பற்றிப் பேசுபவர்கள், பணம் கொடுத்தால் எவர் வேண்டு மானாலும் மருத்துவராகலாம் என்கிறபோது அங்கு தரத்தைப் பற்றிக் கவலைப்படாதது ஏன்? மாறாக உண்மையில் அங்கே தரத்தைப் பலிகொடுக் கின்றனர். எனவே தேசிய அளவில் தகுதிகாண் நுழைவுத்தேர்வு நடத்தினாலும், அதன் மூலம் தனியார் கல்லூரிகளில் நடைபெறும் கட்டணக் கொள்ளையைத் தடுக்கமுடியாது, தடுக்க மாட்டார்கள். ஏனெனில் கட்டணக் கொள்ளை பற்றி சாமானிய மக்கள் முதல், அறிவு ஜீவிகள் வரை வெளிப் படையாக ஊடகங்களில் பேசினாலும் கூட இந்தியாவில் இதுவரை யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை, மாறாக கட்டணக் கொள்ளை அதிகரித்துவருவதோடு அது மேலும் சட்டபூர்வ அங்கீகாரத்தோடு நடைபெற்று வருகிறது. ஏற்கனவே தனியார் தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கும் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் படி நுழைவுத்தேர்வு நடத்த மாநில அளவில் அமைப்புகள் உள்ளன. அவை ஒவ்வொரு ஆண்டும் பெயரள விற்கான நுழைவுத் தேர்வுகளை நடத்துகின்றன. ஆனாலும் கூட கட்டணக் கொள்ளை தடுக்கப் படவில்லை. எனவே நீட் தேர்வு வருவதால் தனியார் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளையைத் தடுக்க முடியாது. மாறாக அரசாங்கமே அனைத்து கல்வி நிறுவனங்களையும் நிதிஉதவி செய்து நடத்த வேண்டும். அப்போதுதான் இதற்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும்.

தேசிய தகுதிகாண் மற்றும் நுழைவுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் தரப் பட்டியல் வழங்கப் பட்டாலும் மாணவர்கள் சேர விரும்பும் மாநிலங்களுக்கு மற்றும் தனியார் கல்லூரிகளுக்கு தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும். இதன்மூலம் விண்ணப்பக் கட்டணம் இருமடங்காகும். இதுவும் மாணவர்களுக்கு சுமையை ஏற்படுத்தும்.

இந்த நுழைவுத் தேர்வு மூலம் பொதுவாக நகர்ப்புற தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர் களுக்கு மட்டுமே வாய்ப்பு கிட்டும். அதிலும் கல்விக் கட்டணத்தோடு சேர்த்து நுழைவுத் தேர்வு பயிற்சிக்கென இனி மேலும் பல லட்சங்கள் செலவு செய்யும் நிர்ப்பந்தத்திற்கு பெற்றோர்கள் ஆளாவர். பொது நுழைவுத் தேர்வு என்றதுமே தற்போது உடனடியாகப் பத்திரிகைகளில் கோச்சிங் சென்டர் விளம்பரங்கள் பல்கிப் பெருகிவருவதே அதற்குச் சான்றாகும். இத்தகைய சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள்தான் நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெறவும் முடியும் என்ற சூழல் உருவாகும். இவ்வளவு செலவு செய்ய சாமானிய மக்களால் முடியாது. இதன்மூலம் இனி மருத்துவராகும் வாய்ப்பு சாமானிய மக்களிடமிருந்து சட்டப்பூர்வமாகப் பறிக்கப்படுகிறது.

மேற்கூறிய வாதங்களிலிருந்து நீட் தேர்வு கல்வி வியாபாரமயத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது என்பது திண்ணம். மருத்துவக் கல்வி வியாபாரமயம் என்பது ஒட்டுமொத்த மருத்துவத்துறையின் வியாபார மயத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது. மேலும் காட்ஸ் (GATS) ஒப்பந்தத்தின்மூலம் சேவைத் துறையில் பெரிய அளவில் முதலீடுசெய்ய அந்நிய நிறுவனங்கள் கழுகுபோல் காத்திருக்கையில் 'நீட்' தேர்வு அந்த செயல்முறைப்போக்கிற்கு மேலும் உறுதுணையாக நிற்கும்.

இவ்வாறான கல்வி – மருத்துவ வியாபார மயத்தால் அமெரிக்கா போன்ற முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் ஏழை மக்களுக்கு மட்டுமல்ல நடுத்தர, உயர் நடுத்தர மக்களும்கூட தமது பிள்ளைகளை மருத்துவ படிப்பிற்கு அனுப்ப முடியாமலும் மருத்துவமனைகளில் நிவாரணம் பெறமுடியாமலும் விழிபிதுங்கிநிற்கின்றனர்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

மாபெரும் நவம்பர் புரட்சி

# மாபெரும் லெனின் அவர்கள்தான் முதல் சோசலிச அரசினை நிறுவினார்

4ம் பக்கத் தொடர்ச்சி

2. உழைக்கும் வர்க்கத்தின் வர்க்க உணர்வு பெற்ற படைப்பிரிவான கட்சி என்பது ஒரு முன்னணிப்படை மட்டுமல்ல, அது உழைக்கும் வர்க்கத்தின் அமைப்பு ரீதியிலான படைப்பிரிவாகும். ஆனால் அது வெறுமனே, அமைப்புரீதியிலான படைப்பிரிவு மட்டுமின்றி, உழைக்கும் வர்க்க அமைப்பின் அனைத்து வடிவங்களையும்விட மிக உயர்ந்த வடிவமாகும்.

3. 'பாட்டாளி வர்க்கத்திற்கு அதன் அமைப்பைத் தவிர வேறெந்த ஆயுதமுமில்லை'. எனவே, கட்சி உறுப்பினர்கள் கட்சியின் கீழான ஏதாகிலும் ஒரு அமைப்பில் உறுப்பினராக இருந்தாக வேண்டும்.

4. சரியாக பணியாற்றிடவும், மக்களை ஒழுங்குடன் வழிநடத்திடவும், மத்தியத்துவக் கொள்கையினடிப்படையில் உழைக்கும் வர்க்கத்தின் கட்சியானது கட்டப்பட்டாக வேண்டும். இதன் பொருள், தலைமையென்பது கீழ்மட்ட அமைப்புகள் மேல்மட்ட அமைப்புகளுக்கு சமர்ப்பித்து நடந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இருந்திடல் வேண்டும் என்பதாகும். மேலும், அனைத்து மட்டத்திலான தலைவர்களும் தொண்டர்களும் கட்சியின் கட்டுப்பாட்டினை கடைபிடித்தாக வேண்டும்.

5. கட்சி எனப்படுவது உழைக்கும் வர்க்க அமைப்பின் மிக உயர்ந்த வெளிப்பாடாகும். எனவே, கட்சிதான் அனைத்து பிற அமைப்புக்களையும் வழிநடத்த வேண்டும். எனவே கட்சியானது, உயர்ந்த சித்தாந்தத்தைக் கொண்டிருக்கும், வர்க்கப் போராட்ட விதிகளில் மற்றும் ஒழுங்கு முறைகளில் நன்கு பரிச்சயம் கொண்ட மற்றும் புரட்சிகர இயக்கத்தை நடத்தும் அனுபவம் கொண்ட உழைக்கும் வர்க்கத்தின் மிகவும் முன்னேறிய பிரிவினரைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டாக வேண்டும்.

6. கட்சியானது மக்களுடனான தொடர்பை தொடர்ச்சியாக பராமரித்துக் கொண்டிருக்க வேண்டியது மிக மிக முக்கியமானதாகும். இல்லையெனில், அது முன்னேறிச்சென்றிடவே முடியாது.

7. கட்சியானது ஒருபோதும் குவோட்டிஸ்ட் கட்சியாக நிச்சயம் மாறிடக்கூடாது. கட்சியானது சூழ்நிலைமைகள் அவைகளின் வழியில் சென்றிட ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. கட்சியானது தன்னிச்சையாக நடைபெறுபவைகளுக்கு ஒரு தொங்குதசையாக (அப்பென்டேஜ்) செயல் படாது. அது தன்னிச்சையான நிகழ்வுகளுக்கு வால் பிடிப்பதில் ஈடுபடாது.

"ஒரு புரட்சிகர கருத்தியல் இன்றி புரட்சிகர இயக்கம் இருக்காது . . . முன்னணிப்படை போராளியின் பாத்திரத்தை, மிகவும் முன்னேறிய கருத்தியலினால் வழிநடத்தப்படும் ஒரு கட்சியால் மட்டுமே நிறைவேற்றிட முடியும்" என்பதை லெனின் அவர்கள் சுட்டிக்காண்பித்தார்.

"தன்னிச்சையாக நடக்கும் உழைப்பாளர் இயக்கத்திற்கு தலைவணங்குவதானது, உணர்வு பெற்ற வகையினரின் பாத்திரத்தையும் சமூக ஜனநாயக கட்சியின் பாத்திரத்தையும் சிறுமைப் படுத்துவதாகும். இதன் பொருள், அவ்வாறு சிறுமைப் படுத்துவோர் விரும்புகின்றனரோ இல்லையோ, எது எப்படியிருந்தாலும் அவர்கள் தொழிலாளர்கள் மத்தியில் பூர்ஷ்வா சித்தாந்தத்தின் செல்வாக்கினை பலப்படுத்துகின்றனர்" என லெனின் அவர்கள் கூறினார். (தேர்வு நூலகள், ஆங்கிலப் பதிப்பு, மாஸ்கோ தொகுதி 1)

1900ல் லெனின் அவர்கள் ஒரு உண்மையான மார்க்சிச கட்சியை கட்டியமைப்பதற்கான பிரதான கடமையை விரித்துரைத்தார். கட்சியை உருவாக்கி ஸ்திரப்படுத்துவது என்பதன் பொருள், இரஷ்ய சமூக ஜனநாயகவாதிகள் மத்தியில் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கட்டியமைப்பதாகும் என அவர் எழுதினார். பிரதிநிதிகள் கூட்டங்களில் வெறுமனே ஆணைகள் பிறப்பிப்பதினாலும் அல்லது முன்மொழிவுகளையும் தீர்மானங்களையும் ஏற்றுக்கொள்வதினாலும் இத்தகைய ஒற்றுமை மற்றும் ஒப்புறவை ஒருபோதும் அடைந்திட முடியாது. ஒற்றுமையை அடைந்திட சில குறிப்பிட்ட விஷயங்களை செய்தாக வேண்டும்.

முதலாவதாக, கருத்தொற்றுமை எய்தப்பட வேண்டும். அத்தகைய ஒற்றுமையானது, இரஷ்ய சமூக ஜனநாயகவாதிகள் மத்தியில் நிலவும் கருத்து வேறுபாடுகளையும் குழப்பங்களையும் அகற்றிவிடும். இல்லையெனில், நமது ஒற்றுமை என்பது, போலியான ஒற்றுமையாக இருந்து கொண்டு அது தற்போதைய குழப்பங்கள் அப்படியே இருப்பதற்கு உதவிபுரிந்து கொண்டும் தவறான கருத்துக்களை முழுமையாக அகற்றும் செயல்முறைப் போக்கினை தடுத்து நிறுத்திவிடும். மாபெரும் லெனின் அவர்கள், ஒற்றுமையை அடைவதற்கான போராட்டத்திற்கு மிகப்பெரும் அழுத்தம் தந்தது வெறுமனே புரட்சியின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவற்காக மட்டும் அல்ல.

தோழர் லெனின் அவர்களின் மதிப்புமிக்க மாணவரான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள், கருத்தொற்றுமை என லெனின் அவர்கள் எதனை பொருள்படக் கூறினார் என்பதை விளக்கியிருக்கின்றார். அது, வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் மார்க்சிசத்தை பிரயோகிக்கும் போராட்டமே என்றும் அது மட்டுமே இந்த புரட்சிகர தத்துவத்தை சரியாக ஈர்த்துக்கொள்ள ஏதுவாக அமையும் என்பதாகவும், அது ஒரு நாட்டின் ஸ்தூலமான சூழ்நிலைமையில் மார்க்சிசத்தை ஸ்தூலப்படுத்தும் போராட்டமே என்பதாகவும், அது பூர்ஷ்வா கலாச்சாரத்திற்கெதிரான கம்யூனிசக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் போராட்டமே என்பதாகவும் மற்றும் அது கட்சியில் கூட்டுத்தலைமையையும் ஜனநாயக மத்தியத்துவத்தையும் வளர்த்தெடுக்கும் போராட்டம் என்பதாகவுமே லெனின் அவர்கள் பொருள் படுத்தினார் என அவர் விளக்கினார்.

லெனின் அவர்கள் அவரது பிரசித்தி பெற்ற 'ஓரடி முன்னே ஈரடி பின்னே' என்ற நூலில் மார்க்சிச வரலாற்றில் முதன் முறையாக புரட்சிகர கட்சியின் பாத்திரத்தை ஸ்தூலமாக உயர்த்திப் பிடித்தார். பாட்டாளிவர்க்கத்தின் முன்னணிப் படையான கட்சிதான் பாட்டாளிவர்க்கத்தின் கைகளிலிருக்கும் முதன்மையான ஆயுதமாகும் என்பதைக் காண்பித்தார். பாட்டாளி வர்க்கத்தின் ஒரு புரட்சிகர கட்சியில்லாமல் எந்தப் புரட்சியும் நடைபெறாது, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவிடும் போராட்டமும் நடைபெறாது என்றார்.

இரஷ்யாவின் பெரும்பான்மை சமூக ஜனநாயக அமைப்புகள் போல்ஷ்விக்குகளுடன் இணைந்தன. அந்நேரத்தில் ஸ்டாலின் அவர்கள் சிறையிலடைக்கப் பட்டிருந்தார். இரண்டாவது மாநாட்டின் முடிவுகள் அவருக்குத் தெரிய வந்த பின்னர், லெனின் அவர்கள் தலைமையிலான போல்ஷ்விக்குகளுக்கு பலமான ஆதரவாக நின்றார்.

அதனைத்தொடர்ந்து போல்ஷ்விக்குகள் உழைக்கும் வர்க்க போராட்டங்களை முழு வேகத்துடன் கட்டத்துவங்கினர். 1901லிருந்து 1904 வரையில் மிகப்பெரும் அளவில் வர்க்கப் போராட்டங்கள் உருவாயின. 1904ல் இரஷ்ய–ஜப்பானிய போர் வெடித்தது. அப்போர், புரட்சிகர இயக்கத்தின் பேரலையை முறியடித்துவிடுமென பிற்போக்குவாத ஜார் அரசாங்கம் எதிர்பார்த்தது. அந்த எதிர்பார்ப்பை சிதறடித்துவிட்டு 1904 – டிசம்பர் மாதம் போல்ஷ்விக்குகள் பாகு எண்ணெய் வயலில் மிகப்பெரும் வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்தனர். அந்த வேலை நிறுத்தமானது, நாடு முழுவதிலும் எண்ணற்ற வேலை நிறுத்தங்களை தூண்டிவிட்டது. இந்த வேலைநிறுத்தங்கள் யாவும் நெருங்கிவரும் புரட்சியை முன்னறிவிக்கும் இடிமுழக்க கர்ஜனை போன்று இருந்தன.

### 1905ல் நடந்த முதல் புரட்சிகர எழுச்சி

மென்ஷ்விக்குகள் ஜாரின் போர் நடவடிக்கைகளை ஆதரித்து மட்டுமின்றி எதிலும் தலையிடாமலிருந்த தாராளவாத பூர்ஷ்வாக்களை முழுவதுமாக சார்ந்திருந்தனர். ஆனால் லெனின் அவர்கள், 1905ல் நடந்த பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியை ஒரு வேறுபட்ட புரிதலில் உணர்ந்துகொண்டார். உலக முதலாளித்துவம் ஏகாதிபத்திய நிலையை அடைந்த ஒரு காலகட்டத்தில்தான் இத்தகைய புரட்சியானது நடந்துகொண்டிருந்தது என்பதை அவர் சுட்டிக்காண்பித்தார். அதனால்தான் அவர், பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிகளில் பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரமானது, அப்புரட்சிகளுக்கு தலைமையேற்பதுதான் என்பதை உயர்த்திப் பிடித்தார். அவரது பார்வையில், வெற்றியடைய வேண்டுமெனில் பாட்டாளிவர்க்கம் தலைமை யேற்றிடுவது புரட்சிக்கு மிக முக்கியமானதாகும். அதனால்தான் மென்ஷ்விக்குகள் சார்பாக பிளக்கனோவ் மக்கள் ஆயுதங்களை கையிலெடுப்பதற்கு எதிரான கடுமையான எதிர்ப்பை பதிவு செய்த நேரத்தில், போல்ஷ்விக்குகள் ஆயுதம் தாங்கிய புரட்சியின் மூலம் ஜார் ஆட்சியை அழித்தொழித்து ஒரு தற்காலிக புரட்சிகர அரசாங்கத்தை நிறுவிட விரும்பினார்கள். பிளக்கனோவின் இந்த நம்பிக்கை துரோகமானது, புரட்சிகர இயக்கங்கள் மீது கொடுமையான அடக்கு முறையை ஏவிட ஜார் அரசாங்கத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. அதனால், புரட்சிகர எழுச்சியானது பின்வாங்க வேண்டியிருந்தது.

1905லிருந்து 1907 வரையில் நிகழ்ந்த துணிச்சலான மூன்று வருட போராட்டத்தினால் இரஷ்யாவின் பாட்டாளி வர்க்கத்திற்கும் இரஷ்ய மக்களுக்கும் கிடைத்த மகத்தான நன்மைகளை, பிற நாடுகள் அடைவதற்கு பல ஆண்டுகள் ஆயிற்று. இந்த போராட்டமானது, நம்பிக்கை துரோக, வெறுக்கத்தக்க, இறுதிக்கட்டத்திலிருக்கும் தாராளவாதத்தின் செல்வாக்கிலிருந்து உழைக்கும் வர்க்கத்தை விடுவித்தது. அது, இரஷ்யாவின் சுரண்டப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட வர்க்கம் முழுமைக்கும் புரட்சிகர வெகுஜன போராட்டத்தை வளர்த்தெடுக்கும் உத்வேகத்திறனை வழங்கியது. இரஷ்யாவின் இந்த முதல் புரட்சியானது வெற்றியடையவில்லை. ஆயினும் அது, உலகம் முழுவதிலும் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களின் மீது மிகப்பெரும் செல்வாக்கை செலுத்தியது.

தோல்வியில் முடிந்த இந்த புரட்சியானது, இரஷ்யாவை உலகப் புரட்சிக்கான மையப்புள்ளியாகவும், இரஷ்ய உழைக்கும் வர்க்கத்தை லெனினது போல்ஷ்விக் கட்சி வழிநடத்திய புரட்சியின் முன்னணிப்படையாகவும் மாற்றியது. லெனின் அவர்கள், இரஷ்ய புரட்சியின் முதன்மையான சிந்தனையாளராகவும், அமைப்பாளராகவும் இரஷ்யப் புரட்சியின் தலைவராகவும் உருவானார். ஆனால், தோல்வியில் முடிந்த 1905ல் நடந்த புரட்சியானது, விரக்தியையும் உருவாக்கியது. ஆனால் லெனினது எழுச்சியூட்டும் தலைமைதான் மக்களை விரக்தியிலிருந்து தட்டியெழுப்பி, மீண்டும் கிளர்ந்தெழ வைத்து அடக்குமுறையின் நுகத்தடியிலிருந்து விடுதலையடைவதற்கான பாட்டாளிவர்க்க புரட்சிகர போராட்டத்தை வளர்த்தெடுத்திட வைத்தது. புரட்சியை பலப்படுத்திடும் ஒற்றைக் குறிக்கோளுடன் லெனின் அவர்கள், பல்வேறு வழிகளிலான சிக்கல் மிகுந்த போராட்டங்களை தொடர வேண்டியிருந்தது.

இது தொடர்பான, பூர்ஷ்வா பாராளுமன்றமான டூமாவில் ஒரு சூழ்நிலைமையில் இணைந்தது மற்றும் மற்றொரு சூழ்நிலைமையில் புறக்கணித்தது குறித்த லெனினது ஈடுஇணையற்ற உதாரணமாயிருக்கின்ற மார்க்சிய விளக்கத்தினை இங்கே குறிப்பிடுகிறோம்.

சர்வாதிகார ஜார் ஆட்சிக்கெதிராக ஒரு பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்கான வாய்ப்பு 1905ல் இருந்த போது, அதனை ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியாக மாற்றும் பொருட்டு பாட்டாளி வர்க்கமானது புரட்சிகர இயக்கத்தில் தீவிரமாக பங்கெடுப்பது மட்டுமின்றி ஒரு தீர்மானகரமான தலைமைப் பாத்திரத்தை வகிக்க வேண்டுமென லெனின் விரும்பினார். ஆனால், பல்வேறு காரணங்களினால் அப்புரட்சியானது நடக்காமல் போனபோது, அனைத்து சட்டரீதியான வழிவகைகளையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு புரட்சிகர போராட்டத்தினை கட்டியமைத்திடுவதற்கான புதிய முயற்சியை துவக்கிடும் தேவையை அந்த யதார்த்த சூழ்நிலைமை வேண்டியது.

ஆகையினால், புரட்சியின் "பெருகிவரும் அலை" என லெனின் கூறியதிலிருந்து, சொத்தின் மற்றும் சமூக–சொத்துரிமைத் தகுதியின் அடிப்படையில் மிக அப்பட்டமாக, மறைமுகமான ஒரு தேர்தல் முறையின் அடிப்படையில், சர்வாதிகார

தொடர்ச்சி 12ம் பக்கம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# ஏப்ரல் 24: எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 70வது ஸ்தாபக தினம்






தேனியில் ஏப்ரல் 24 அன்று மாநில அளவிலான பொதுக் கூட்டத்தில் தோழர் ஸ்ரீதர், மத்திய ஸ்டாப் உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார், கூட்டத்தில் கலந்துக் கொண்டோர்

## மாபெரும் நவம்பர் புரட்சி

*11ம் பக்கத் தொடர்ச்சி*

அரசு ஊழியர்களின் மேற்பார்வையுடனும் உதவியுடனும், தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பிரபுக் களையும் பெரும் பூர்ஷ்வாக்களையும் கொண்ட ஒரு கலந்தாலோசிக்கும் சட்டசபையான டூமாவை கூட்டிட அறிவித்தது மக்களின் பிரதிநிதித்துவ கருத்தின் முழுமையான கேலிக்கூத்தென போல்ஷ்விக்குகள் சரியாகப் புரிந்துகொண்டனர்.

ஆதலால் அந்நேரத்தில், லெனினைப் பொறுத்த மட்டில், "தராளவாத பூர்ஷ்வாக்கள் டூமா சட்ட சபையில் பங்கெடுப்பது என்பது அப்போதைய தருணத்தில் அவர்களது கிளர்ச்சியில் தொய்வினை ஏற்படுத்திக்கொண்டு, மக்களை விட ஜாரை திருப்திப் படுத்திக்கொண்டு, ஜாருக்கும் பூர்ஷ்வாக்களுக்கு மிடையே போடப்பட்ட எதிர்ப்புரட்சி ஒப்பந்தம்" என்பதாகும் (தேர்வுநூல்கள், தொகுதி 9, பக்கம் 181).

ஆனால் லெனின் அவர்கள், "இந்த அனுபவத்தை பிற நிலைமைகளில், பிற சூழ்நிலைமைகளில் குருட்டுத்தனமாக, காப்பியடித்து நன்காராயாமல் பிரயோகித்தோமேயானல், அது உண்மையில் அது ஒரு மிகப்பெரும் தவறாகும்." (இடதுசாரி கம்யூனிசம், பக்கம் 22) என்பதை தெளிவுபடுத்தினார்.

அது, உண்மையான புரட்சியாளர்கள் எவ்வாறு மார்க்சிச பகுப்பாய்வு முறையியலை பின்பற்றி புரட்சிகர இயக்கத்தை பலப்படுத்திடவேண்டி, தருணத்தின் தேவைக்கு பொருந்தும் வகையில் பல்வேறு கட்டங்களில், பல்வேறு தந்திரோபாயங் களைக் கடைபிடிக்கின்றனர் என்பதற்கான அறிவார்ந்த உதாரணமாக இருந்தது.

லெனினது மொழியில் கூறுவதானால், "பாராளுமன்ற மற்றும் பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட போராட்ட வடிவங்களை மாறிமாறி எடுப்பது, பாராளுமன்றத்தை புறக்கணிப்பதில், அதில் பங்கெடுப்பதில், சட்டரீதியிலான மற்றும் சட்டத்திற்கு புறம்பான போராட்டங்களில் எடுக்கப் பட்ட உத்திகள், இது போன்ற அவைகளின் இடையிலான உறவுகள் மற்றும் தொடர்புகள்–ஆகிய இவையாவும் ஓர் வியக்கத்தக்க செழுமையான உள்ளடக்கத்தின் அடையாளம் . . . "

. . . 1905ல் போல்ஷ்விக்குகளின் "பாராளுமன்ற" புறக்கணிப்பானது, உயரிய மதிப்பு வாய்ந்த அரசியல் அனுபவத்தை வழங்கி புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தை செழுமைப்படுத்தியது. அத்தகைய புறக்கணிப்பு, சட்ட மற்றும் சட்டத்திற்குப் புறம்பான போராட்டங்களையும் பாராளுமன்ற மற்றும் பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட போராட்டங்களையும் ஒன்றிணைக் கையில், பாராளுமன்ற வடிவங்களை நிராகரிப்பது சில சமயங்களில் பயனுள்ளதாகவும் மற்றும் அத்தியாவசியமானதாகவும்கூட உள்ளது என்பதைக் காட்டுகிறது. இருப்பினும் இந்த அனுபவத்தை குருட்டுத்தனமாக, அப்படியே பின்பற்றி, நன்கு ஆராயாமல் பிற நிலைமைகளில், பிற சூழ்நிலை மைகளில் பிரயோகிப்பது மிகப்பெரும் தவறாக இருக்கும்.

. . . ஒரு மிகவும் விடாப்பிடியான போராட்டத்தில் சட்டரீதியிலான மற்றும் சட்டத்திற்குப்புறம்பான போராட்ட வடிவங்களை இணைத்திடுவது நமது கடமை என்ற கருத்தையும் ஒரு மிகவும் பிற்போக் கான பாராளுமன்றத்திலும்கூட பங்கெடுப்பது நமது கடமையாயிருந்தது என்பதையும் உயர்த்திப் பிடிக்கவில்லையென்றால், (பலப்படுத்துவதும் வளர்த்தெடுப்பதும் ஒரு பக்கம் இருக்கட்டும்) போல்ஷ்விக்குகளுக்கு பாட்டாளிவர்க்க புரட்சிகரக் கட்சியின் மையக்கருவை தக்கவைத்துக் கொள்ள முடியாமற் போயிருக்கும்" ■

## மாபெரும் நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழா

7 நவம்பர், 2016 – 17 நவம்பர், 2017

**SUCI (COMMUNIST)**



## நீட் . . .

*10ம் பக்கத் தொடர்ச்சி*

130 கோடி மக்களுக்குமேல் உள்ள நமது நாட்டில் 70% மக்கள் பஞ்சை பராரிகளாய் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்களாய் மூன்று வேளை உண்ண உணவின்றி தவித்துவரும் வேளையில் கல்வித்துறையிலும் மருத்துவத் துறையிலும் நடைபெற்றுவரும் வியாபாரமயம் நமது மக்களின் எதிர்காலத்தை ஏற்கனவே கேள்விக்குறியாக்கி விட்டது. கல்விக் கூடங்களிலும் மருத்துவமனை களிலும் மக்கள்தம் சிறு சேமிப்புகளும் சூறையாடப் பட்டு நிர்மூலமாக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் தொகைக்கேற்ப மருத்துவர்களின் தேவையும் அதிகரித்து வருகிறது. அதை ஈடுசெய்ய தகுதிவாய்ந்த, சமூகப் பொறுப்புணர்வுகொண்ட ஏழை–எளிய மக்களுக்கு சேவைசெய்யும் ஈகை குணங்கொண்ட மருத்துவர்களை அதிக எண்ணிக் கையில் உருவாக்கவேண்டிய தேவையிருக்கிறது. அத்தகைய மருத்துவர்களை கல்வியை வியாபார மயமாக்காத அரசாங்கக் கல்லூரிகளிலிருந்தே உருவாக்கமுடியும். எனவே மத்திய, மாநில அரசாங் கங்கள் தேவைக்கு ஏற்ப அதிக எண்ணிக்கையில் மருத்துவக் கல்லூரிகளையும் மருத்துவமனை களையும் திறக்கவேண்டும். அங்கே பயிலவரும் மாணவர்களின் தகுதியை தீர்மானிக்கும் திறன் அந்தந்த மாநிலங்களின் பிரத்யேக சூழ்நிலைக் கேற்ப அந்தந்த மாநில கல்வியாளர்களும் மக்களும் தீர்மானிக்கும் திறன்படைத்தவர்களாவர். 'நீட்' போன்ற மேலுமொரு தேர்வென்பது எவ்வகையிலும் தீர்வாகாததோடு மேலும் சிக்கலை உருவாக்குவதால் அதனை முழுமையாக திரும்பப் பெறுவதோடு கல்வித்துறையில் குறிப்பாக, உயர் கல்வியில் மத்திய அரசாங்கம் தலையீடு செய்வதை நிறுத்தவேண்டும். இதை மத்திய அரசாங்கம் செய்யமுன்வராத சூழலில் கல்வியாளர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் நற்சிந்தனை படைத்த மக்களும் அதற்கான நிர்ப்பந்தத்தை மத்திய அரசாங்கத்திடம் ஏற்படுத்தவேண்டும் ■

**பாட்டாளி சிந்தனை**

**வருட சந்தா**

**ஏப்ரல் 01, 2017 முதல்**

**ரூ 70/-**

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**